ஆங்கில மருந்து வகைகள்
குழந்தைகளுக்கான
பால்மா வகைகளுக்கு
குறிஞ்சி
மெடிக்கல்ஸ்
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி
(எமக்கு வேறு கிளைகள்
இல்லை)
[32213]

பக்கங்கள் : ஆறு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

அன்பளிப்பு
மற்றும்
சகலவிதமான
பொருட்களுக்கும்
குறிஞ்சி
மெடிக்கல்ஸ்
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி
(எமக்கு வேறு
கிளைகள் இல்லை)
(32213)

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 29 ஞாயிற்றுக்கிழமை (14 08 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 259

வலி வடக்கு, வலி கிழக்கு, வடமராட்சி பகுதிகள் மீது பலாலி முகாமிலிருந்து கொடூர ஷெல் தாக்குதல்!

ஏழு அப்பாவிகள் பலியாகினர் இருபத்தைந்து பேர் காயம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 14

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகலில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வடமராட்சிப் பகுதிகளை நோக்கி படையினர் நடத்திய கொடூர ஷெல் தாக்குதலில் நிறை மாதக் கர்ப்பிணி பெண் மற்றும் குழந்தை, சிறுவர், சிறுமிகள் உட்பட ஏழு பேர் உடல் சிதறிப் பலியாகினர்; இருபத்தைந்துக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர்; முப்பதுக்கும் அதிகமான வீடுகள் பலத்த சேதமடைந்தன.

அளவெட்டி, ஏழாலை, மல்லாகம், தெல்லிப்பளை மற்றும் வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, இடைக்காடு, அச்சுவேலி, பத்தமேனி, தோப்பு, புத்தூர், ஆவரங்கால், நவக்கிரி, கதிரிப்பாய், நீர்வேலி, அச்செழு பகுதிகளிலேயே சுமார் நூறு வரையிலான ஷெல்கள் விழுந்து வெடித்து அனர்த்தம் விளைவித்தன.

நேற்றுக் காலை 10 மணியளவில் பலாலி முகாமிலிருந்து பல்வேறு திசைகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள் நேற்று பிற்பகல் 2-30 மணி வரைத் தொடர்ந்தன.

நேற்றுக் காலை 11 மணியளவில் வலிகாமம் வடக்கு பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலினால் பத்து வயதுச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

நிறைமாதக் கர்ப்பிணி உட்பட ஐவர் ஒரே குடும்பத்தில் பலி!

யாழ்ப்பாணம், ஓக 14

வலி. வடக்கு, வலி. கிழக்கு மற்றும் வடமராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களினால் நிறை மாதக் கர்ப்பிணிப் பெண், சிறுவன், இரு சிறுமிகள் குழந்தை உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர், அவர்களின் விவரம் வருமாறு;-

★ ஏழாலை வடக்கில் நேற்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் திருஞானசிவம் ஜெனிதன் (வயது 10) என்ற சிறுவன் அந்த இடத்திலேயே பலியானான்.

ஏழாலை வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து ஏழாலை கிழக்கில் வசித்து வந்த இவர் தனது தகப்பனாருடன் தமது வீட்டைப் பார்க்கச் சென்ற போது ஷெல்லுக்கு இரையானார்

இவரது தந்தை காயம் எதுவுமின்றி தப்பினார்.

★ அச்சுவேலி தெற்கில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் ஆவரங்காலைச் சேர்ந்த சுந்தரம் தவராஜா (வயது 19) மரணமானார்

இதனால் துண்டிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவர் அங்கு சில நிமிட நேரத்தில் மரணமானார்.

6 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவத் தளபதியாக மீண்டும் சிசிலை நியமிக்க அரசு முயற்சி?

ஹமில்டனின் பதவி பறிபோகலாம்

கொழும்பு, ஓக 14

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக உள்ள ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு —

முன்னாள் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவை அப்பதவிக்குக் கொண்டு வரும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதாக நேற்று முன்தினம் இராணுவ வட்டாரங்களில் பேசப்பட்டது என செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

பூநகரியில் புலிகள் நடத்திய தாக்குதலில் அரசுப் படையினருக்கு ஏற்பட்ட தோல்வியை அடுத்து —

இராணுவத் தளபதி பதவியை விட்டு விலகிச் சென்ற சிசில் வைத்தியரத்னா பின்னர் தாய்லாந்தில் இலங்கைத் தூதராகப் பதவியேற்றிருந்தார். அவர் தற்போது திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. வெற்றிபெற்றால் பிரதமர் பதவி யாருக்கு?

ரணில் பதில் அளிக்க மறுப்பு

கொழும்பு, ஓக. 14

தேர்தலில் ஐ.தே.க. வெற்றியீட்டினால் அதன் அடுத்த பிரதமர் யார் என்பது தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாளான நேற்று வரை தெளிவுபடுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பி. பி. ஸியின் முகவர் எல்மோ பெர்னாண்டோ பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை அலரி மாளிகையில் வைத்து நேற்று பேட்டி கண்டார்.

ஐ.தே.கவின் அடுத்த பிரதமர் யார் என்பதை அந்தப் பேட்டியில் தெரிவிக்க ரணில் விக்கிரமசிங்காவால் முடியாமற் போனதாக பி. பி. ஸி

(2 ஆம் பக்கம் பார்க்க)

துர்க்கை அம்மன் ஆலயத்தில் மிக அடக்கமான கிரியைகள்

வலிகாமம் தெற்கு, ஓக. 14

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி அம்மன் ஆலய மகோற்சவத்தில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் இருபதாம் திகதி சனிக்கிழமை வரை அனைத்துக் கிரியைகளும் அடக்கமாக நடைபெறும்.

இதற்கான முடிவு ஆலய நிர்வாக சபைக்கூட்டத்தில் செய்யப்பட்டது.

அடியார்கள் அதிகளவில் கூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் —

காவடி, மற்றும் கற்பூரச் சட்டி முதலிய நேர்த்திக்கடன்களை பிறிதொரு சந்தர்ப்பத்தில் நிறைவேற்றும்படி அடியார்களை கேட்டுக்கொள்வது எனவும் —

மல்லாகம் சந்திக்கு அப்பால் உற்சவம் முடிவடையும் வரை

((2 ஆம் பக்கம் பார்க்க)

கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம், ஓக 14

நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்காவை தினமும் பெரும் எண்ணிக்கையானோர் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா, நல்லூர் உற்சவத்தையொட்டி, உற்சவ நாட்களில் தினமும் முற்பகல் 10.00 மணி [illegible] 11 00 மணிவரை [illegible]

(3 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



தோல்விக்கு மேல் தோல்வி ஏற்படும் போது தலைமைக்கு ஆபத்து வருகுது பாருங்கோ!

தாக்குதலில் காயமடைந்தோர்

அச்சுவேலி, ஓக. 14

நேற்று இடம்பெற்ற கொடூர ஷெல் தாக்குதல்களில் வலி கிழக்கில் 13 பேரும் வலி வடக்கில் 7 பேரும் வடமராட்சியில் 3 பேரும் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நீர்வேலி

நீர்வேலி அச்செழுவில் விழ்ந்த ஷெல்லினால் இ. கங்கா மெலீஸ்வரன் [வயது 52] காயமுற்றார்.

புத்தூர்

புத்தூர் சந்தைப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் காயமுற்றோர்:-

★ நவரத்தினம் நவமங்களன் [வயது 19]

★ இராசதுரை மீரா [வயது 14]

அச்சுவேலி

அச்சுவேலி தோப்பு பகுதியில் விழுந்த ஷெல்லினால் இந்திரன் உஷாநந்தினி [வயது 8] என்ற சிறுமி படுகாயமுற்றார். இவரின் தாய், தந்தை உட்பட குடும்பத்தவர்கள் ஐவர் ஷெல்லினால் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரம் தேவன் [வயது 30] என்பவரும் இப்பகுதியில் காயமுற்றார்.

அச்சுவேலி தெற்கில் சிவசக்தி கோயில், கடாக்கன்னி மற்றும் பகுதிகளில் விழுந்து வெடித்த ஷெல்களினால் படுகாயமுற்றோர் விவரம் வருமாறு:-

★ குமாரு மகேஸ்வரி [வயது 55]

★ தாமோதரம்பிள்ளை தங்கவேல் [கண்ணன்] [வயது 36]

★ தம்பராசா செல்லமாறு

(5 ஆம் பக்கம் பார்க்க)

அராலிக் கடலில் புலிகள் அதிரடி 3 படையினர் பலி! படகு மூழ்கடிப்பு

சிப்பாயின் சடலமும் மீட்பு

யாழ்ப்பாணம் ஓக. 14

அராலி கடற்பகுதியில் நேற்று அதிகாலை 1 45 மணியளவில் படகில் ரோந்து வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

கொல்லப்பட்ட படையினர் மூவரின் சடலங்களை புலிகள் கைப்பற்றினர். அவர்கள் ரோந்து வந்த படகும் புலிகளால் கைப்பற்றப்பட்டு கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

தாக்குதலில் சிக்கிய படையினருக்கு உதவியாக தாக்குதல் நடத்திய ''வாட்டர் ஜெற்'' படகு மீதும் —

அப்பகுதிக்கு வந்த ஹெலி மீதும் விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

இந்த சம்பவங்களால் படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றி முழு விவரமும் தெரியவரவில்லை.

மூழ்கடிக்கப்பட்ட படகில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரத்தையும் மற்றும் ஒரு பகுதி ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

அதிகாலையில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 3 மணிக்கும் பின்னர் காலை 6 மணிக்கும் ஹெலிகொப்டர் ஒன்று அப்பகுதியை வட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்புத் தாக்குதலில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 25 ஆக உயர்வு!

முகாம் முற்றாக அழிப்பு

யாழ்ப்பாணம், ஓக 14

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டம் ஆண்டான்குளம் பகுதியில் உள்ள கட்டுமுறிவு என்னும் இடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் எஸ். எப். முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

இத்தாக்குதலின் போது இராணுவத்தினரின் மூன்று சடலங்களையும் பெருந்தொகையான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்

இரவு 11 50 மணியளவில் போராளிகள் அணியினர் முகாமைச் சுற்றிவளைத்து கடும் தாக்குதலைத் தொடுத்தனர். சுமார் 30 நிமிடநேரத் தாக்குதலில் முகாம் விடுதலைப்புலிகள் வசம் வீழ்ந்தது.

கைப்பற்றிய முகாம் பின்னர் விடுதலைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது.

கொல்லப்பட்டோர

(3 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு தாக்குதலில் அள்ளப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஓக 15

மட்டக்களப்பு கட்டுமுறிப்பு இராணுவ எஸ். எப். முகாம் மீது நடத்தப்பட்ட வெற்றிகரத் தாக்குதலின் போது முகாமில் இருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பெருமளவான ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

★ 60 மி. மீ மோட்டார் — 04
★ அவற்றுக்குரிய ஷெல் — 22

(2 ஆம் பக்கம் பார்க்க)

17 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக 14

மட்டக்களப்பு கட்டுமுறிப்பு இராணுவ எஸ். எப். முகாம் அழிக்கப்பட்ட வெற்றிகரமான தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் 17 வேங்கைகள் வீரச்சாவடைந்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் வெங்கடதரன் (நடராஜா ராஜேந்திரன் -மட்டக்களப்பு)
★ லெப்டினன்ட் கமலன் [illegible] றெ பேர்ட்சன் (கதிர்காமத்தம்பி இராஜலிங்கம்)
★ லெப்டினன்ட் நம்பி [illegible] பாலு (முத்துலிங்கம் தவபாலன்)
★ லெப்டினன்ட் ரகநாதன் (மாணிக்கம் விஜயேந்திரன்)
★ லெப்டினன்ட் அருந்தாதரன் [illegible] (கனகாய

(5 ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் பிரசாரம் நள்ளிரவுடன் முடிந்தது

அடுத்த 48 மணி நேரத்தில் வன்செயல் அதிகரிக்கலாம

கொழும்பு, ஓக 14

பொதுத் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் [illegible] அடுத்து —

அடுத்த 48 மணி நேரத்தில் நாட்டில் தேர்தல் வன்செயல்கள் அதிகளவில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

சந்நிதி உற்சவ பாதுகாப்பு சம்பந்தமாக பதில் இல்லை

வல்வெட்டித்துறை, ஓக. 14

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவ காலத்தில் ஆலயத்துக்குப் பாதுகாப்புத் தர முடியாது என்று பாதுகாப்பு அமைச்சிடமிருந்து எவ்வித தகவலும் தமக்குக் கிடைக்கவில்லை என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

வருடாந்த உற்சவத்தை நிறுத்துமாறு கூறும் பணிப்புரை எதுவும் தமக்கு ஊடாக ஆலய நிர்வாகத்துக்கு அறிவிக்கப்படவில்லை என்பதை- ஆலயத்தில் இயங்கும் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தினரும் உறுதி செய்தனர்.

இதேவேளை செல்வச்சந்நிதி மகோற்சவத்தின்போது

(5 ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சரின் ஜீப்பில் வந்தோரால்

எதிரணி மாகாண சபை உறுப்பினர் சுட்டுக்கொலை

கொழும்பு ஓக 14

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரமுகரும் மாகாண சபை உறுப்பினருமான ரஞ்சித் சிறிவர்தன என்பவர் நேற்று முன்தினம் கம்பஹாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமான ஜீப்பில் வந்ததாகக் கருதப்படும் இனந்தெரியாத குழு ஒன்றே இப் படுகொலையைச் செய்ததாக எதிரணியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுக்கூட்டமொன்றுக்கு மேடை அமைக்கும் வேலைகளைப் பார்வையிட்ட பின்னர் திரும்பிக் கொண்டிருந்த வேளை இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கொலை நடை

(2 ஆம் பக்கம் பார்க்க)

வ.
தெல்லிப்பழை

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
மஹோற்சவம்
முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 15-08-94 திங்கள் தொடக்கம் 20-08-94 சனிக்கிழமை வரையிலான உற்சவ தினங்களில் அனைத்துக் கிரியைகளும் மிகவும் அடக்கமாக நடைபெற வேண்டியுள்ளது. யாழ். அரச அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி ஆகியோரின் வேண்டுதலுக்கமைய இந் நடவடிக்கை எடுக்கிறோம் என்பதை துர்க்காதேவி அடியார்கள் அனைவருக்கும் சமர்ப்பிக்கிறோம்.

காவடி, கற்பூரச் சட்டி முதலிய நேர்த்திகளைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் நிறைவேற்றிக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

பிரதேச செயலர்
வலி வடக்கு,
தெல்லிப்பழை.
(7601)

சமூகக்கல்வி செயலமர்வும் கருத்தரங்கும்

சமூகக்கல்வி செயலமர்வும், கருத்தரங்கும் யாழ் கோட்டத்தில் 6-11வரை சமூகக்கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான செயலமர்வு 16-08-1994 – 20-08-1994 வரை 5 நாட்களுக்கு காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை யாழ் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவுப் பகுதியில் நடைபெறும். அனைத்து சமூகக்கல்வி ஆசிரியர்களையும் தவறாது பங்கு பற்றுமாறு யாழ் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவிக்கிறார்.

பிரதிக்கல்விப்பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.
(சி/8679]

G. C. C.
வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்
514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O. P. Dக்கு முன்பாக)

கண், காது, மூக்கு தொண்டை (ENT), முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றன. இத்துடன் மருத்துவ ஆய்வுகூட சேவைகளும் (E. C. G) இங்கு நடைபெறுகின்றன.

- நிர்வாகி
(32370)

யாழ். மாவட்ட
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம் (வ-து)

விசேட பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் 1994-08-28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தல் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்தும் சமாசத்துடன் தொடர்பில்லாமலும் இருக்கும் அங்கத்துவ சங்கங்கள் கூட்ட அறிவித்தலையும், பொதுச்சபை பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதத்தையும் சமாசக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி
பதில் மாவட்ட செயலாளர்.
யாழ். மா. சி. க. கூ. ச. சமாசம்
182, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-8878]

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
23
—
01
—
1917

மறைவு:
15
—
07
—
1994

திருமதி சண்முகம் இவளயாச்சி

திதி: 14 – 08 – 1994

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் பாதாரவிந்தங்களை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (14-08-1994) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
[32364]

சந்திரிகாவை இழிவுபடுத்தும் செய்தியுடன் போலி ராவய

லட்சக்கணக்கான பிரதிகள் விநியோகம்

கொழும்பு, ஓக. 14

சந்திரிகாவை இழிவுபடுத்தும் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்ட போலி 'ராவய' பத்திரிகையின் லட்சக்கணக்கான பிரதிகள் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நேற்று விநியோகிக்கப்பட்டன.

"சந்திரிகா ஒரு கொலைகாரி' என்று தலைப்பிட்டு இப்போலி ராவய பத்திரிகை அச்சிடப்பட்டிருந்தது.

இத்தகவலை 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் பி. பி. ஸியின் சிங்கள சேவைக்குத் தெரிவித்தார். [இ-எ-6]

இன்று நடப்பவை

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சனசமூக நிலையங்களின் உப சமாஜம் நடத்தும் அறிவியல் அரங்கு வலிமேற்கு பிரதேச சபை அலுவலகத்தில் இன்று ஞாயிறு காலை 9-30 மணிக்கு நடைபெறும். "சமூகத்தில் மதமும் பண்பாடும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திருமதி கிருஷ்ணவேணி அன்ரனி நோபேட் விரிவுரையாற்றுவார். (ஐ-28)

★ ★ ★

துப்பனை மதி சனசமூக நிலையம் நடத்தும் நிஷாந்தன் பாலர் பாடசாலை இரண்டாம் ஆண்டு விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிறு தும்பனை தம்புருவளைப் பிள்ளையார் கோயில் முன்றிலில் நடைபெறும்.

கலைச் சிறப்புச் சேவையாளர் திரு. வி. சேதுநாயகம் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-173)

★ ★ ★

இன்று காலை 9 மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் "கைவல்யம்" என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவை வைத்திய கலாநிதி திரு. வ. கின்னப்பு நிகழ்த்துவார். [க-161]

★ ★ ★

வலி. மேற்கு சுழிபுரம் பிரதேசசபை அலுவலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக நுண் துறைப் பகுதி விரிவுரையாளர் திருமதி கிருஷ்ணவேணி அன்ரனி றோபேட் "சமூகத்தில் மதமும் பண்பாடும்" எனும் பொருள் பற்றி உரையாற்றுவார். (க-161)

★ ★ ★

தென்மராட்சி, ஓக. 14

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவு அங்கத்தவர்களின் விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கோயில் வீதியில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

வண்ணை வீரமாகாளி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் போது ஆலயத்தில் சேவையாற்றிய தொண்டர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் (ஏ-117)

★ ★ ★

அரியாலை உதயஒளி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு திரு. செ. இராசேந்திரன் தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

சாவகச்சேரி அறவழி நிலையத்தினரின் இலக்கியப் பேரவையினால் நடத்தப்படும் இலக்கிய உரையரங்கு இன்று ஞாயிறு பிற்பகல் 3 30 மணிக்கு நுணாவிலில் உள்ள அறவழி பயிலகத்தில் நடைபெறும். 'திரைப்பட ரசனை' என்ற தலைப்பில் திரு. அ. யேசுராசா அதில் உரையாற்றுவார். (ஐ-31)

நாய்களுக்கு விசர் தடுப்பூசி

வட்டுக்கோட்டை, ஓக. 14

வட்டுக்கோட்டையில் சங்கரத்தை, துணவி, மாவடி ஆகியவற்றில் உள்ள வீட்டு நாய்களுக்கு எதிர் வரும் 20 ஆம் திகதி காலை 8-30 தொடக்கம் பிற்பகல் 3-30 மணிக்கு விசர்தடுப்பூசிபோடப்படும். (க-161)

கேணல் கிட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பார்வையிட வசதியாக திறந்திருக்கும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ)

சந்நிதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்தின் பாதுகாப்புக் குறித்து எழுதியகடிதத்துக்கு பாதுகாப்பு அமைச்சிடமிருந்து தமக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்று அரச அதிபரும் நேற்றிரவு தெரிவித்தார். [அ-155-4]

இராணுவத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை —

இராணுவத் தளபதி பதவிக்கு மீண்டும் லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினாவை நியமிக்க அரசு முயற்சிப்பதாக கடந்த வாரம் கொழும்பு வட்டாரங்களில் பேசப்பட்டது.

அப்போது இது பற்றி கருத்துக் கேட்ட போது —

பொது மக்கள் ஐக்கிய முன்னணியினர் பரப்பி வரும் வதந்திகளில் இதுவும் ஒன்று என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

"ஜெரி சில்வா தான் இராணுவத் தளபதி, தளபதியாக அவரே இருப்பார். அவரை மாற்றுவது குறித்து யாருமே சிந்திக்கவில்லை.

"சிசில் வைத்தியரத்னாவை மீண்டும் நாட்டுக்கு அழைக்க வேண்டிய தேவை ஏதும் ஏற்படவில்லை —

"பொது மக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தால் ஜெரி சில்வாவை மாற்றி வேறு எவரையாவது நியமிக்குமா என்பது எனக்குத் தெரியாது" —

இப்படி பிரதமர் கூறினார். [உ-எ-3-6]

எதிரணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற இடம் ஐ. தே. க அரசின் சண்டியன அரசியல்வாதி எனக் கருதப்படும் அமைச்சர் போல் பெரேராவின் கோட்டை என செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

ஐ. தே. க அரசைச் சேர்ந்தவர்கள் ஜே. வி. பியின் வெறிச் எதிரணியினருக்கு மிரட்டல் விடுத்து வருவதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-6)

மட்டக்களப்புத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைவிட்டு ஏனைய படையினர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த முகாமின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சமயத்தில் விடுதலைப் புலிகளின் மற்றைய அணியினர் திருகோணமடு, சதிரவெளி முகாம்கள் மீதும் தாக்குதல் நடத்தினர்.

இந்த இரு முகாம்கள் மீதும் புலிகள் தொடர்ச்சியாகச் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இத்தாக்குதலினாலும் இராணுவத் தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது: ஆயினும் சேத விவரங்கள் தெரியவரவில்லை

விடுதலைப் புலிகளால் முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட வேளை ஹெலி ஒன்று அப்பகுதியில் கலிபர் தாக்குதலை சரமாரியாக மேற்கொண்டது (ஐ-4)

புலிகளின் குரல் வானொலியில்

14 — 08 — 1994
ஞாயிறு இரவு
★ 8-01 — இசையரங்கம் — பாடுபவர் திரு. தில்லைமணி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் — இலங்கை மண் 36 ஆம் அங்கம்

15 — 08 — 1994
திங்கள் காலை
★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

துர்க்கை அம்மன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை எந்தவித மோட்டார் வாகனங்களையும் செலுத்த அனுமதிப்பதில்லை எனவும்— நிர்வாக சபையின் கூட்டத்தில் முடிவாகியது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி ஆகியோரின் வேண்டுதலுக்கமைய இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை தேவஸ்தான நிர்வாகசபையினருக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடாக அனுப்பி வைக்கப்பட்ட செய்தியில் தேர்தல் காலமாக இருப்பதால் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க முடியாதிருப்பதால், இவ்வருடத்துக்கான உற்சவத்தை நிறுத்திவைக்குமாறு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் அறிவித்திருந்தார். (அ-152-89)

ஐ. தே. க......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது:

"கூட்டங்களில் கூடும் மக்களின் எண்ணிக்கையை வைத்து வெற்றி யாருக்கு என்று கூற முடியாது" என்று ரணில் அந்தப் பேட்டியில் தெரிவித்தார்.

ரணில்—சந்திரிகா தொலைக்காட்சி விவாதத்துக்கு பொ. ஐ. முன்னணி விதித்துள்ள நிபந்தனை பற்றி அவரிடம் கேட்டபோது —

வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பான சந்திரிகாவின் நிலைப்பாட்டை தாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் —விக்கிரமசிங்கா பதிலளித்தார்.

மட்டக்களப்பு தாக்குதலில்--

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

★ அவற்றுக்குரிய பூஸ்ரர் பெட்டி	—	02
✶ 81 மி. மீ. மோட்டர்	—	01
★ அதற்குரிய ஷெல்	—	32
★ அதற்குரிய பூஸ்ரர் பெட்டி	—	02
★ ஸ்கோப்	—	01
★ பேஸ்ட் பிளேட்	—	01
★ ஏ கே. எல் எம் ஜி.	—	03
★ அதன் றம் மகஸீன்	—	05
★ தொடர் ரவைகள்	—	845
★ ஆர். பி ஜி.	—	03
★ அவற்றுக்குரிய ஷெல்	—	25
★ ரி 56 - 2 ரக துப்பாக்கி	—	08
★ ரி 56 - 1 ரக துப்பாக்கி	—	02
★ ரி. 81 துப்பாக்கி	—	02
★ ரி 56 துப்பாக்கி	—	01
★ ஜி. 3 சினைப்பர் ஸ்கோப்புடன்	—	01
★ அதற்குரிய மகஸீன்	—	01
★ என். ப. - 5 ஒலி அமுக்கியுடன்	—	01
★ அதற்குரிய மகஸீன்	—	01
★ ரவைகள்	—	50
★ மொனபக் செற்	—	01
★ அதற்குரிய அன்டெனா	—	01
★ எம். 4 குண்டுகள்	—	32
★ புகைக்குண்டு	—	01
★ நடுத்தர ரவை	—	13720
★ நேட்டோ ரவை	—	2350
★ ஜி பி. எம். ஜி சுடு குழல்	—	01
★ ஜி பி. எம். ஜி தொடர் ரவை	—	400
★ ஹிட்பாக்	—	10
✶ தண்ணீர் கான்	—	06
★ சார்ஜர் லைற்	—	01
★ ஏ கே. மகஸீன்	—	26
★ [illegible]	—	02

(ஐ)

நல்லூர் ஆலயச் சூழலில் இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 14

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மூன்றாம் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு

மாலை 6-7 மணிவரை சிவபிரியா கலாமுத்துவின் இசைக்கச்சேரி.

இரவு 7-8 மணி வரை— வி. பரமசாமியின் இசைக் கச்சேரி.

நல்லை ஆதீனத்தில்

மு. ப. 9 மணி-சமயப் பயிற்சி வகுப்பு.

மு. ப 9.30 மணி - சமய தீட்சை.

பி. ப. 2 மணி - சமயப் பேருரை-முருகன் பெருமை.

பி. ப. 2 மணி முதல்-செல்வி ராஜி கணேசலிங்கத்தின் பண்ணிசை.

பி. ப. 3 மணிமுதல்-அதிபர் இ. திருநாவுக்கரசுவின் சமயப் பேருரை.

மாலை 6-7 மணி வரை பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தியின் "கந்தர் அநுபூதி" பற்றிய தொடர் இசைப் பேருரை.

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில்

மாலை 5.30 - 6.30 மணி வரை

கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் "சம்பூர்ண இராமாயணம்" பற்றிய தொடர் இசைப் பேருரை.

WANTED
FITTERS CUM WELDERS
WALK IN INTERVIEW

We Require Fitters Cum Welders For Immediate Appointment. Walk In With Bio Data And Certificates for Interview On Monday 15 - 08 - 94 At 9 00 A. M.

PROMOTERS ENGINEERING
COMPANY LTD.
844, POINT PEDRO ROAD,
NALLUR, JAFFNA.
[32375]

விற்பனைக்கு

தும்பு மெத்தைகள், வாகனங்களின் இருக்கைகளுக்கான குசனுகள் "மெத்தைத்தும்பு" ஆகியன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு வணிகர்களுக்கு விசேட கழிவுண்டு மொத்தமாக தும்பையோ அன்றி மெத்தைகளையோ கொள்வனவு செய்வோர்க்கு கொள்வனவிற்கேற்ப விசேட சலுகைகளும் வழங்கப்படும்.

கேடில்ஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம்
தலைமைக் காரியாலயம்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி
(7596)

தேர்தலில் சந்திரிகா வெல்லமுடிந்தால்?
விஜயதுங்காவை ஜனாதிபதி மாளிகையிலிருந்து துரத்தியடிப்பாரா?
அரசியலமைப்பை தூக்கி வீசுவாரா?
அரசியலமைப்பு மரபை மிதிக்கத் துணிவாரா?.........
விடைகளிற்கு............
மு. திருநாவுக்கரசு
எழுதியுள்ளார்
அரசியலமைப்பு
ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய
விற்பனைக்கு வந்துவிட்டது
(32377)

அசோகா நகை அகத்தின்
ஆதரவில்

யாழ்ப்பாணக் கல்லூரி ஓல்ட் கோல்ட்ஸ் (Old Golds) விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான 6 ஓவர்களைக் கொண்ட

கிரிக்கெட் சுற்றுப் போட்டி

விண்ணப்ப முடிவு திகதி:- 25 08-1994
போட்டி நடைபெறும் இடம்:-
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப
நிறுவன மைதானம்

விண்ணப்ப படிவங்களைப் பெற்று ஒப்படைக்க வேண்டிய முகவரி;-

அசோகா நகை அகம்
275, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அணி ஒழுங்குத் தெரிவு:- 26-08-1994 யாழ்ப்பாணக் கல்லூரியில் மாலை 4.30 மணிக்கு நடைபெறும்
(7600)

புதனன்று வெளியாகும் பொதுத் தேர்தல் முடிவுகள்

தொங்கு நாடாளுமன்றத்தைத் தோற்றுவிக்கும்?

பத்தாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் முடிவுகள் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்ட ரீதியான தேர்தல் முடிவுகள் புதன் காலையில் வெளியாகிவிடும் என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்குகள் எண்ணப்படுவது மூன்று கட்டங்களாக இடம்பெறும். முதல் கட்டமாக மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் எண்ணப்படும். இரண்டாம் கட்டமாக மாவட்ட ரீதியில் அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளும் அவற்றிற்கு கிடைத்த ஆசனங்களின் எண்ணிக்கையும் வெளியிடப்படும். மூன்றாம் கட்டமாக விருப்புவாக்குகள் மூலம் தெரிவான உறுப்பினர்களின் பெயர்கள் வெளியிடப்படும்.

மந்திரத்தால் மாங்காய விழுத்த முடியுமா?

சாதாரண மந்திரவாதியினால் இதனைச் செய்ய முடியுமோ இல்லையோ—

இலங்கை அரசியலில் இரு அரசியல் (மந்திர) வாதிகள் இச் சாதனையை புரிந்து காட்டப்போவதாக தொடை தட்டி நிற்கின்றனர்.

இவர்களில் ஒருவர் இந்த நாட்டின் அரசியலில் 'பழம் தின்று கொட்டை போட்ட'வர். மற்றவர் இப்போது தான் அரசியல் சாகஸத் துறையில் அடியெடுத்து வைத்துள்ளார்: ஒருவர் தமிழர், மற்றவர் முஸ்லிம்.

தமிழர், மலையகத் தமிழர்களிடையே முடிசூடா மன்னர் என்ற பெயரை ஏற்கவே பெற்றவர்; மற்றவர் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் 'முடிசூடா மன்னர்' என்ற பெயரை தட்டிச் செல்ல முனைபவர்.

இவர்கள் நடத்திக் காட்டப்போகும் சாதனை என்ன?

இன்னும்
இரண்டு தினங்களில்

நாட்டின் பத்தாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நாளை மறுநாள் நடைபெறவிருக்கிறது.

பதினேழு ஆண்டுகளாக ஆட்சியை அனுபவித்துவரும் ஐக்கிய தேசியக் கட்சி, இந்த சுகபோகத்தை இன்னும் ஒரு ஐந்து ஆண்டுகள் அனுபவித்துவிட வேண்டும் என்ற தவிப்பில் போட்டியிடுகிறது.

1977க்குப் பின்னர் ஆட்சியைப் பிடிக்க முயன்ற தோல்வி கண்டு வந்த சுதந்திரக் கட்சி —

எப்படியாவது இம்முறையாவது அரசு கட்டிலில் ஏறி அமர்ந்து விட வேண்டும் என்ற உத்வேகத்தில் தமது தலைமையில் சிறிய கட்சிகளை இணைத்துக்கொண்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் போட்டியிடுகின்றது.

இம்முறை இரு கட்சிகளுக்கும் இடையேயான போட்டி மிக நெருக்கமானதொன்றாக இருக்கிறது.

பதினேழு ஆண்டுகளாக ஒரு கட்சியின் ஆட்சியைப் பார்த்துச் சலித்துப்போன வாக்காளர்கள் — புதிய ஆட்சி ஒன்றைக் காண விரும்புகின்ற நிலை தென்படுவதால், நாடாளுமன்ற அரசியலுக்கு புதிய முகமான சந்திரிகாவின் தலைமையில் போட்டியிடும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றிக் கம்பத்தைத் தாண்டக்கூடும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

வெற்றிக்கனியை யாரும் தட்டிச் செல்ல முடியாத நிலை வரக்கூடும்

113 ஆசனங்கள்

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் இத்தேர்தல் நடைபெறுகிறது.

நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகும். இவர்களில் 196 பேர் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுபவர்கள். மிகுதி 29 பேரும் தேசியப்பட்டியல் எம்.பிக்களாக கட்சிகளால் நியமிக்கப்படுவார்கள்.

புதிய ஆட்சியை அமைக்க எந்த ஒரு கட்சிக்கும் அல்லது அணிக்கும் 113 ஆசனங்கள் கிடைக்க வேண்டும்.

இத்தேர்தலில் இருகட்சிகளுக்கும் இடையே மிக நெருக்கமான போட்டி நிலவுவதால் எந்தக்கட்சியும் சாதாரண பெரும்பான்மைப்பலமான 113 ஆசனங்களைப் பெறுவது நடக்க முடியாத காரியம் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கருத்துக் கணிப்புகளும் — எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்க முடியாத நிலையே தென்படுவதாக கோடி காட்டியுள்ளன.

விகிதாசாரம்
பிரதிநிதித்துவ
தேர்தல் முறை

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடைபெறும் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் சார்பான அலை வீசும் சாத்தியமே இல்லை என்பது அவதானிகளின் கருத்து.

இந்த முறையின் கீழ் ஒரு கட்சி நாட்டில் உள்ள தேர்தல் தொகுதிகள் அனைத்திலும் வெற்றி பெற்றாலும் கூட அக்கட்சிக்கு நாடாளுமன்றத்தில் சுமார் 15 ஆசனங்களே பெரும்பான்மையாகக் கிடைக்க முடியும்.

இதற்கு ஓர் உதாரணமாக 1989 இல் நடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. அதில் சுதந்திரக் கட்சி நான்கு நாடாளுமன்றத் தொகுதிகளில் மட்டுமே வெற்றியீட்டியது; ஆனால் அக்கட்சி 67 எம்.பிக்களை நாடாளுமன்றத்தில் பெற்றது. ஏனைய நாடாளுமன்றத் தொகுதிகள் அனைத்திலும் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு125 ஆசனங்களே கிடைத்தன.

ஆகவே புதிய நாடாளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மையுடன் அரசமைக்க ஒரு கட்சிக்கு 113 ஆசனங்கள் நிச்சயம் தேவைப்படுகிறது.

எதிர்வரும் தேர்தலில் கூடுதலான ஆசனங்களை எந்தக் கட்சி கைப்பற்றினாலும், ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மை எதற்கும் கிடைக்காத நிலையே ஏற்படும்என்பதுதற்போதைய கணிப்பாகும்.

'தொங்கு'
நாடாளுமன்றம்

இந்த நிலையில் 'தொங்கு' நாடாளுமன்றம்தான் எதிர்வரும் 16 ஆம் திகதித் தேர்தலில் தெரிவாகக் கூடிய வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது.

இதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து போதியளவு பிரதிநிதித்துவத்தை ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் பெற முடியாத நிலையில் இருப்பதை தென் பகுதி அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

உதாரணமாக—

வடக்கு-கிழக்கில் உள்ள எட்டுமாவட்டங்களில் இருந்து 31 எம்.பிக்கள் தெரிவுசெய்யப்பட வேண்டியுள்ளனர்.

இம் மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் எம்.பிக்களில் பெரும்பாலோர் தமிழ்க் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர் என்பது ஒரு கணிப்பு.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு பத்து ஆசனங்கள் வரை கிடைக்கும் என்பது இன்னொரு மதிப்பீடாகும்.

வடக்கு-கிழக்கில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுமக்கள் ஐக்கியமுன்னணியும் பலவீனமான நிலையிலேயே காணப்படுகின்றன.

ஏனைய
17 மாவட்டங்களில்

புதிய நாடாளுமன்றத்தில் ஆட்சி அமைக்கக் கூடிய அளவு ஆசனங்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தென் பகுதியில் உள்ள ஏனைய 17 மாவட்டங்களில் இருந்து தான் பெறவேண்டும்.

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் ஆளும் கட்சிக்கே அதிக ஆசனங்கள் கிடைக்கும் என்பதும் —

கம்பஹா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கே அதிக ஆசனங்கள் கிடைக்கும் என்பதும் அரசியல் நோக்கர்களின் கணிப்பாகும்.

17 மாவட்டங்களில் பதினைந்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றாலும் கூட,

தேசியப்பட்டியலின் மூலம் கிடைக்கும் எம்.பிக்களைச் சேர்த்தும் 113 ஆசனங்களை அக்கட்சி பெறும் என்பது சாத்தியமானதல்ல என்றே கருதப்படுகின்றது. இதே நிலைதான் ஆளும் கட்சிக்கும் உள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியும் 1989 தேர்தலில் வெற்றியீட்டிய மாவட்டங்களில் நான்கு அல்லது ஐந்தை எதிரணியிடம் பறிகொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது.

எனவே ஆளும் கட்சியும் 113 ஆசனங்களைப் பெறுவது என்பது முடியாத காரியம் என்பதே அரசியல் நோக்கர்களின் முடிவாகும்.

113 ஆம் இலக்க
வெற்றிக்கம்பம்

இவ்வெற்றிக்கம்பத்தைத் தாண்ட "இதோ நாங்கள் இருக்கின்றோம்" என்று கூறிக் கொண்டு இ.தொ.கா. தலைவர் தொண்டமானும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரபும் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

தொண்டமான் - அஷ்ரப் தலைமைகளுக்கும் சவால்

விஜேதுங்காவுடனான கருத்து வேற்றுமையை ஒதுக்கி வைத்து விட்டு, மலையகத் தமிழரின் ஐந்து லட்சம் வாக்குகளையும் திரட்டித் தந்து வெற்றிக் கம்பத்தைத் தாண்ட யானைக்கு உதவுவோம் என்று கூறி தொண்டமான் முழுமூச்சாக பணிபுரிகிறார்.

இ.தொ.காவின் தேர்தல் சின்னமான சேவலைக் கைவிட்டு, ஆளும் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிடும் 14 இ.தொ.கா. வேட்பாளர்களும் வெற்றியீட்டினால் —

ஐக்கிய தேசியக் கட்சி பெறும் 113 ஆசனங்களில் 14 இ.தொ.காவினதாக இருந்தால் —

எதிர்கால ஐ.தே.க அரசில் "நான் ஆசைப்பட்டால் அது நடந்து விடும்" — என்று பகிரங்கமாக கூறி மலையகத்தில் தேர்தல் சூறாவளிப் பிரசாரத்தில் 83 வயதான தொண்டமான் ஈடுபட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தை தளமையமாகக் கொண்டியங்கும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ஜனாப் அஷ்ரப்போ "தேசிய அரசியலில் ஆட்சி புரிபவர் யாரென்பதை நிர்ணயிப்பதில் தொண்டமானுக்கு சளைத்தவர் நான் அல்லன்" என்று கூறி துணிந்து செயல்பட ஆரம்பித்துள்ளார்.

சந்திரிகாவுடன் நள்ளிரவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்ட அஷ்ரப் "எனது வாக்கு வங்கியிலும் ஐந்து லட்சம் முஸ்லிம் வாக்குகள் உள்ளன" என்று கூறியும் —

"இவ்வளவு வாக்குகளையும் திரட்டிக் கொடுத்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சியை ஏற்படுத்துவேன்" என்று சூளுரைத்தும் செயல்படுகின்றார்.

அது மட்டுமல்ல, வடக்கு — கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களை முஸ்லிம் காங்கிரஸின் சின்னத்தின் கீழ் போட்டியிட வைத்திருக்கிறார் அஷ்ரப். இது அவருக்கு ஒரு 'பிளஸ் பொயின்ட்' ஆக அமைகின்றது.

ஆனால் தொண்டமானின் அரசியல் சாணக்கியம் இந்த இடத்தில் சறுக்கி விட்டதென்றே கருத வேண்டியிருப்பதாக மலையகத் தமிழ் வட்டாரங்கள் கருதுகின்றன.

தீபன்ராஜா

ஆளும் கட்சியின் தேர்தல் சின்னத்தில் தமது வேட்பாளர்களை இம்முறையும் தொண்டமான் போட்டியிட வைத்திருப்பது அவரின் ஐம்பது ஆண்டுகால அரசியல் வரலாற்றில் "மைனஸ் பொயின்ட்", ஆகவே கருதப்படுகின்றது.

இங்குதான் அஷ்ரப் அரசியல் சாணக்கியத்தில் தொண்டமானை விஞ்சிவிட்டார் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

தேர்தல் கூட்டில் அஷ்ரபுக்கும், சந்திரிகாவுக்கு தகராறு ஏற்பட்டால், சந்திரிகா தன்னிச்சையாக முஸ்லிம் காங்கிரசை வெளியே தள்ளிவிட முடியாது காரணம் முஸ்லிம் காங்கிரஸின் சின்னத்தின் கீழ் வெற்றியீட்டிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்களை முஸ்லிம் காங்கிரஸில் இருந்து அஷ்ரப் வெளியேற்றி விட முடியும்.

ஆனால் தொண்டமானின் நிலைமையோ ஆளும் கட்சிக் கூட்டில் மிகவும் பரிதாபகரமானது என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

எப்படி? மீண்டும் விஜேதுங்காவுடன் கருத்து வேறுபாடு ஏற்படும் போது, ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டு எம்.பிக்களான இ.தொ.காவினரை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பீடம் தன்னிச்சையாகவே தூக்கி வெளியே போட்டு விடமுடியும்.

சேவலுக்குச் சவால்

எப்படியாயினும் — நாளை மறுநாள் நடைபெறும் தேர்தலில் வெற்றிக்கனியைப் பறிப்பதற்கு ஆளும் கட்சிக்கு தொண்டமானின் ஐந்து லட்சம் வாக்குகள் உதவுமா?

மலையகத்தில் வெற்றி ஈட்டும் இ.தொ.கா. வேட்பாளர்களினால் ஆளும் கட்சி வெற்றிக்கனியை (113 ஆசனங்களைப்) பிடிக்குமா?

இக் கேள்விகளுக்கான பதில்கள் தொண்டமான் தலைமைக்கும் "சேவல்" சின்ன கட்சியின் எதிர்காலத்துக்கும் சவாலாக அமையப் போகின்றன.

வாய்ச் சவடாலா?

இதே போன்று — பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் வெற்றிக்கனியைத் (113 ஆசனங்களைத்) தட்டிப் பறிக்க, முஸ்லிம் காங்கிரஸ் போதிய அளவு உறுப்பினர்களை கிழக்கு மாகாணத்தில் இருந்து பெற்றுக் கொடுக்குமா?

அஷ்ரபின் வாக்கு வங்கியில் ஐந்து லட்சம் முஸ்லிம் வாக்குகள் இருக்கின்றன என்பது வெறும் வாய்ச் சவடால் தானா?

இக் கேள்விகளுக்கான பதில்கள் அஷ்ரபின் தலைமையையும் அவரது சாணக்கிய அரசியலின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கப் போகின்றன.

எதிர்வரும் தேர்தலில் தொண்டமானும் அஷ்ரபும் சாதனை படைப்பார்களோ, இல்லையோ - ஒன்று மட்டும் நிச்சயமாகி விட்டது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

கிளின்ரன் நிர்வாகத்தின் ஒக்ரோபர் 15 காலக்கெடு

பொஸ்னிய சேர்பியர்களைப் பணிய வைக்குமா?

வெளி உலகம்

பொஸ்னிய சேர்பியர்களுக்கு அமெரிக்க அதிபர் கிளின்ரன் விடுத்த எச்சரிக்கையை அடுத்து பொஸ்னிய நெருக்கடியில் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

அதாவது பிரதான வல்லரசுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகளினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை பொஸ்னிய சேர்பியர்கள் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்க வேண்டும் என்றும் —

அவ்வாறு ஏற்கத் தவறினால் பொஸ்னிய முஸ்லிம் அரசு மீதான ஆயுதத்தடைகளை (Sanctions) நீக்குமாறு தாம் ஐ.நா பாதுகாப்புச் சபையைக் கோரப்போவதாகவும் அமெரிக்க அதிபர் அறிவித்துள்ளார்.

கடந்த 28 மாதகாலமாக நடைபெற்றுவரும் பொஸ்னிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏற்கனவே பொஸ்னிய முஸ்லிம் அரசு மீதும் —

பொஸ்னிய சேர்பியர்கள் மீதும் —

பொஸ்னிய சேர்பியர்களுக்கு சகலவிதமான ஆயுத, நிதி உதவிகளை வழங்கிவரும் அண்டை நாடான சேர்பியா மீதும் — தடைகளை விதித்துள்ளது.

இதுவரை இரண்டு லட்சம் மக்கள் கொல்லப்படுவதற்கும் பத்து லட்சம் மக்கள் இடம் பெயர்வதற்கும் காரணமான பொஸ்னிய யுத்தம் ஆரம்பமானதற்கு மூலகாரணமானவர் சேர்பிய ஜனாதிபதி ஸ்லோபொடான் மிலோசெவிக் (Slobodan Milosevic) என்பதில் சந்தேகம் இல்லை.

பொஸ்னியாவில் உள்ள சேர்பியர்கள் பகுதியையும் மற்றொரு எல்லை நாடான குரோஷியாவில் (Croatia) உள்ள சேர்பியர்களின் பகுதியையும் சேர்பியாவுடன் இணைத்து அகண்ட சேர்பிய நாடு ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடனேயே பொஸ்னியாவில் சேர்பியர்கள் யுத்தத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந்த யுத்தத்தில் சேர்பியர்கள் இதுவரை பொஸ்னியாவின் முழு நிலப்பரப்பில் எழுபது சதவீதத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

அகண்ட சேர்பிய நாடு ஒன்றே சேர்பியர்களின் ஒரே குறிக்கோள்

ஆனால் பிரதான வல்லரசுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகளினால் பொஸ்னியப் பிரச்சினைக்கு இறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் பொஸ்னிய சேர்பியர்களுக்கு 49 சதவீத நிலப்பரப்பையும் பொஸ்னிய முஸ்லிம்களுக்கும் குரோசியர்களுக்கும் (Moslem - Croat Federation) 51 சதவீத நிலப்பரப்பையும் வழங்குகிறது.

இதனாலேயே இத்தீர்வுத் திட்டத்தை ஏற்க பொஸ்னிய சேர்பியர்கள் மறுத்து வருகின்றனர்:

இந்தத் தீர்வுத் திட்டத்தை பொஸ்னிய முஸ்லிம்—குரோசிய சம்மேளனம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டது.

நாடாளுமன்றம்
நிராகரிப்பு

இந்த தீர்வுத் திட்டத்தை பொஸ்னியாவின் சேர்பியர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள பொஸ்னிய சேர்பியர்களின் தன்னிச்சையான நாடாளுமன்றம் கடந்த மூன்று வாரகாலத்துக்குள் மூன்று தடவைகள் நிராகரித்து விட்டது.

கடைசியாக இந்தத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்த போது, தீர்வுத் திட்டத்தை நிராகரிக்கும் நாடாளுமன்றத் தீர்மானம், பொஸ்னிய சேர்பியர்கள் மத்தியில் சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றும் —

இந்த சர்வசன வாக்கெடுப்பு இம் மாதம் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் பொஸ்னிய சேர்பியரின் நாடாளுமன்றம் அறிவித்தது.

தமது தீர்வுத் திட்டத்துக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்ற பதிலை மட்டுமே தரும்படி தீர்வுத் திட்டத்தைத் தயாரித்த ஐந்து பிரதான வல்லரசுகளும் பொஸ்னிய சேர்பியர்களைக் கோரி இருந்தன.

ஆனால் 'பொஸ்னிய சேர்பியர்கள், பிரதான வல்லரசுகளின் தீர்வுத் திட்டத்தை ஓர் அடிப்படையாக வைத்துக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்தவே விருப்பம் தெரிவித்தனர். இது பிரதான வல்லரசுகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பொஸ்னிய சேர்பியர்கள் மீது எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து இந்த ஐந்து நாடுகளும் [illegible] முடிவு [illegible] தயங்கிய போதே [illegible] அதிபர் பில் கிளின்ரன் பொஸ்னிய முஸ்லிம அரசு மீதான ஆயுதத் தடையை நீக்கும் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தனித்து விடப்படும்
நிலையில்
சேர்பியர்கள்

தீர்வுத் திட்டத்தை தயாரித்த ஐந்து பிரதான வல்லரசுகளில் ரஷ்யா பொஸ்னிய சேர்பியர்களின் நீண்டகால நட்பு நாடு ஆகும். தீர்வுத் திட்டத்தை அடிப்படையாக வைத்து பொஸ்னிய சேர்பியர்களுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதையே ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின் விரும்புகிறார். மற்றும் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் பொஸ்னிய சேர்பியர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆர்வம் அற்று இருக்கின்றன.

பிரதான வல்லரசுகளின் தீர்வுத்திட்டத்தை பொஸ்னிய முஸ்லிம் — குரோசிய சம்மேளனம் அண்டை நாடான சேர்பியா உட்பட முழு உலக நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் மேலதிக தடை எச்சரிக்கையைத் தொடர்ந்து சேர்பிய அரசு பொஸ்னியாவுடனான தனது எல்லைப் போக்குவரத்துக்களைக் கட்டுப்படுத்தி உள்ளது. அத்துடன் பொஸ்னிய சேர்பியர்களுடனான அரசியல் — பொருளாதாரத் தொடர்புகளையும் துண்டித்துள்ளது.

பொஸ்னிய சேர்பியர்களுக்கு ஆயுத நிதி உதவிகளை வழங்கி வருவதற்காக சேர்பியா மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையால் விதிக்கப்பட்ட தடைகள் சேர்பியாவை பொருளாதார நெருக்கடிக்குள் கொண்டு வந்துள்ளன.

யுத்தம் ஏற்பட்டது
எப்படி

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் 6 சமஷ்டி அமைப்புகளைக் கொண்ட ஒரே நாடாக யூகோஸ்லாவியா இருந்தது.

அந்த ஆறு சமஷ்டி அமைப்புகளில் ஒன்றுதான் பொஸ்னியா.

1989,90 ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியன் சிதறுண்டு போனதை அடுத்து 1992 ஆம் ஆண்டளவில் யூகோஸ்லாவியாவும் சிதறுண்டு போனது.

இந்த 6 சமஷ்டி அமைப்புகளில் சேர்பியாவும் மொன்ரெநெக்ரோவும் (Montenecro) இணைந்து ஒரே நாடாக உள்ளன. பழைய யூகோஸ்லாவியாவின் பெயரை அவை இன்றும் தாங்கி நிற்கின்றன.

ஏனைய நான்கு சமஷ்டி அமைப்புகளில் ஸ்லோவேனியா (Slovenia) குரோசியா (Croatia) மக்கடோனியா (Macedonia) ஆகிய மூன்றும் தனித்தனி நாடுகளாகிவிட்டன.

தனி நாடாக மாறிவிட்ட சேர்பியாவில் 92 சதவீத சேர்பியர்களும் —

மொன்ரெநேக்ரோவில் 90 சதவீத மொன்ரெநேக்ரோக்களும் —

ஸ்லோவேனியாவில் 97 சதவீத ஸ்லோவேனியர்களும் —

குரோசியாவில் 80 சதவீத குரோசியர்களும் —

மக்கடோனியாவில் 80 சதவீத மக்கடோனியர்களும் — வசிப்பதால் அந்த நாடுகளில் பிரச்சினை இன்றி தனி அரசுகள் ஏற்பட்டுவிட்டன.

ஆனால் பொஸ்னியாவில் முஸ்லிம்கள் 38 சதவீதமும் சேர்பியர்கள் 37 சதவீதமும் குரோசியர்கள் 24 சதவீதமும் வாழ்கின்றனர்.

சஞ்சாரன்

இதுவே பொஸ்னியாவில் அதிகாரப் போட்டி ஆரம்பிக்கக் காரணமாக இருந்தது.

சேர்பியர்
யுத்த பிரகடனம்

1992 மார்ச் மாதம் பொஸ்னிய நாடாளுமன்றம் கூடி யூகோஸ்லாவியாவில் இருந்து விடுபட்டு பிரிவினைக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றியது. நாடாளுமன்றத்தில் உள்ள முஸ்லிம்களும் குரோசியர்களும் ஆதரவாக வாக்களித்தனர். இதனை சேர்பியர்கள் எதிர்த்து யுத்த பிரகடனம் செய்தனர்.

அன்று ஆரம்பித்த யுத்தமே தற்போதும் தீர்வுக்கான அறிகுறி இன்றி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

வான்ஸ் — ஓவன் திட்டம்

இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஐக்கிய நாடுகள் சபையும் ஐரோப்பிய சமூகமும் இணைந்து தயாரித்த வான்ஸ் — ஓவன் (Vance— Owen) திட்டமும் பொஸ்னிய சேர்பியர்களால் ஏற்கெனவே தூக்கி வீசப்பட்டு விட்டது. ஒரு மத்திய அரசின் கீழ் பொஸ்னியாவை பத்து மாகாணங்களாகப் பிரித்து அங்கு வாழும் இனங்களிடம் ஆட்சியை ஒப்படைப்பதே வான்ஸ் - ஓவன் திட்டம் ஆகும்.

கடைசியாக பிரதான வல்லரசுகளினால் தயாரிக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் வான்ஸ் — ஓவன் தீர்வுத் திட்டத்தை விட ஒருபடி மேலே சென்று பொஸ்னியாவை இரண்டாக துண்டாட வழி வகுக்கிறது.

பொஸ்னிய சேர்பியர்கள் கடந்த வாரம் தலைநகர் சரஜேவோவில் (Sarajevo) உள்ள ஐ.நா. ஆயுதக்கிடங்கில் இருந்து ஆயுதங்களை எடுத்துச் சென்ற சம்பவம் உட்பட பல அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பொஸ்னியாவில் உள்ள ஐ.நா. அமைதிப் படையினரின் ஹெலிக்கொப்டர்கள் பொஸ்னிய சேர்பியர்களின் தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

ஐந்து மாத இடைவெளியின் பின்னர் மீண்டும் நேட்டோ விமானத் தாக்குதல் பொஸ்னியசேர்பியர்களின் நிலைகள் மீது இடம்பெற்றுள்ளன.

பிரதான வல்லரசு நாடுகளின் தீர்வுத் திட்டத்தை ஏற்க மறுத்து பொஸ்னிய சேர்பியர்கள் திட்டமிட்டபடி செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் கிளின்ரன் நிர்வாகமோ பொஸ்னியப் பிரச்சினையில் இழுபறிப்போக்கையே கடைப்பிடித்து வருகிறது. ★

நல்லின ஆடுகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பளைப் பிரிவினர் இப் பகுதியில் உள்ள இருபது பேருக்கு தலா இரண்டு வீதம் நாற்பது நல்லின ஆடுகளை வழங்கவுள்ளனர்

இதற்கென ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-117)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

புத்தம் புதிய றலி சைக்கிள் இரண்டு விற்பனைக்கு உண்டு. 30, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளி (ஆசீர்வாதம் அச்சகம் முன்). (7597)

சில்க்கி, பாமாஸ், பண்டம், லைலன் பிறவுண் கோழிகளும், குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. சந்தியா ரவீந்திரன், குருசு மதவடி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [32367]

A 50 கேம்பிரிட்ஜ், போக்ஸ்வகன் காரின் (5.60x15) ஒரு புதிய வெளிநாட்டு ரயர் ஒரு புதிய ரியூப், ஒரு மீளமைக்கப்பட்ட ரயர். இல. 32, பலாலி வீதி, கோண்டாவில் (திருநெல்வேலி விவசாயப் பாடசாலை அருகில்). (32325)

அடைவைக்கக் கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்; நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32363)

ஒரு மாதம் நிரம்பிய வெள்ளைக் கோழி சில்க்கி (வெள்ளை + கலர்) பிரமா சில்வர் சீப்ரைட், போலிஸ் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சோதியம்மா, டச்சு றோட், மீசாலை. (மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு முன் வீதி) [7598]

காணவில்லை

'N. S' எனவும் 'நர' எனவும் குறிப்பிடப்பட்ட முறையே மயிலை, செங்காரி நிறங்களை கொண்ட இரண்டு கன்னி பசு மாடுகளை 8-8-94ஆம் திகதி தொடக்கம் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் ந. சுந்தரலிங்கம், நுணாவில் கிழக்கு என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [சி-8877]

விற்பனைக்கு

சிறந்த நிலையிலுள்ள லேடீஸ் லுமாலா சைக்கிள் விற்பனைக்குண்டு. கு. ஜெயதீபன், 32, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-8684)

தவறிவிட்டது

பொன்னம்பலம் 160260017V பொன்மலர் 716842479V இலக்க அடையாள அட்டைகளும், இலங்கை வங்கி, மக்கள் வங்கி கணக்கு புத்தகங்களும் நெடுங்குளம் சந்திக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 2/1, குகன் வீதி, அரியாலை விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். (32353)

கனகசபை பாக்கியலட்சுமியின் 426603331V இலக்க தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்திற்கு சேர்ப்பிக்கவும். க. பாக்கியலட்சுமி, சின்னக்கோயில் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (32351)

கே. ரகுபதி ஆகிய நான் திருநெல்வேலி அம்மன் கோவிலில் இருந்து சிவன் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஒரு சிறிய கைப்பையை தவறவிட்டுவிட்டேன். தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கே. ரகுபதி, நிவ்விக்ரர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (32361)

கோப்பாய் பாலத்திற்கும், சாவகச்சேரிக்கும் இடையில் சி. சிவப்பிரகாசபிள்ளையின் குடும்ப அட்டை, 32-7044 மோட்டார் சைக்கிள் பதிவு மாற்ற பற்றுச்சீட்டு என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கைதடி பிள்ளையார் கோயில் அருகில் தேநீர் கடையில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ([illegible])

நாய்க்குட்டி விற்பனை

அழகிய பொமரேனியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் 1½ மாதம் நிரம்பியது. விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 9, 8ஆம் குறுக்குத் தெரு (அடைக்கல மாதா கோயில் பக்கமாக), யாழ்ப்பாணம். (32348)

உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சைவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். [சி-8678]

மணமகள் தேவை

நற்பண்புள்ள இரக்கமாவும் குறைந்த 35 வயது பட்டதாரி ஆசிரியருக்கு 30 வயதிற்குட்பட்ட இந்துப் பண்புள்ள ஆசிரியை மணப்பெண் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 679, மே/பா, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [32360]

பயிற்சி வினாத்தாள்கள்

3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளிற்கான அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம். (7560)

O/L MATHS

ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறுடைவதற்கு 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி (7593)

கோழிக்குஞ்சு விற்பனை

Prima, Broiler குஞ்சுகள், சிவப்பு பேடுக் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [32362]

புறொயிலர் சேவல் குஞ்சு

ஒரு (1) கிழமை பிறவுண் சேவல் குஞ்சுகளும், இறைச்சிக் கோழிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும், பழைய விக்னேஸ்வரா டிஸ்பென்சரிக்கு முன்பாக, பெற்றோல் செற் அருகில், சுன்னாகம். (7299)

வாங்குகிறோம்

துப்புரவான வேப்பம்விதை கொள்வனவு செய்கிறோம். தொடர்பு: மில்க்வைற். (சி 8861)

ஆனந்தம் சீயாக்காய்

சிரசின் தனித்துவத்தை கருத்திற் கொண்டு, கைதடி சுதேச வைத்திய சபைத் தலைவர் ஆலோசனைப்படி தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர். கேட்டு வாங்கி பயன்பெறவும் (சி/8646)

YAMAHA - MATE- 50

Electronic Lancer Model நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: 41, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். [33357]

மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, வீடு, கை பார்த்தல், குறிப்பு எழுதுதல் மற்றும் சகல ஜோதிட ஆலோசனைகளுக்கும் ஜோதிடரை [illegible] 140, செகலர் வீதி, கல்வியங்காட்டுச் சந்தை அருகில் சந்திக்கலாம். (32167)

மாணவர்களுக்கு

இலங்கை அரசினர் [illegible] அம்பலவாணர் சிவராசா, உயர்தர கணக்கியல் - I, வர்த்தகமும் நிதியும் ஆண்டு 9, 10, 11 ஆகியன வீ. சுந்தரேஸ்வரன் விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-8852]

வியாழ மாற்றம்

ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றது. யுரேனஸ், நெப்ரியூனுடனும், வியாழ ராகுவும் ஒவ்வொரு புள்ளிகளில் சஞ்சரிக்கும்போது, சனி செவ்வாய் கெட்ட பார்வைகளால் தேர்தல் மோசடிகளையும், வன்முறைகளையும், U. N. P. போவ்வியால் கலவரங்களையும் உண்டாக்கும். "சதியா" கட்டுட [33369]

"சிவாளி"

சிவாளி நாதஸ்வர நறுக்கு திருவாவடுதுறை நாதஸ்வர நறுக்கு (சிவாளி) விற்பனையாகிறது. கிடைக்குமிடம்: கமலேஸ்வரி களஞ்சியம், 119/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [32337]

மாட்டுவண்டி சவாரி

மயிலணி, ஓச. 14

உடுவில் உதயசூரியன் சனசமூக நிலையம் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 1மணிக்கு சுன்னாகம் கந்தரோடை சவாரி மைதானத்தில் மூன்று பிரிவுகளாக நடைபெறும். (ஒ-89)

கடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்பு

குடாநாட்டில் ஏற்பட்ட விறகு தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு இடம்பெயர்ந்து கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு கடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்புக்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப்பாதியினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இந்த இரட்டைச் சூட்டடுப்புப் பாவனையால் சமையலுக்கு வழமையான பாவனையிலும் அரைப்பங்கு விறகே தேவைப்படுவதால் குடியிருப்பில் வசிக்கும் வறிய மக்களுக்கு உதவியாக அமைந்துள்ளது. (எ)

தீவுப் பகுதியில் விரைவில் உள்ளூராட்சித் தேர்தல்!

ஜனாதிபதி சொல்கிறார் இப்படி

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி விஜேதுங்க அறிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற ஐ. தே. க. பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் சொன்னதாவது;

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை மீட்டெடுக்கும் திட்டம் ஒன்று, திட்டமிடப்பட்ட கால அட்டவணைப்படி செயற்பட்டு வருகிறது. நன்கு ஆராய்ந்தே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வடக்கில் இயல்பு நிலைமையை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இதனைக் குழப்பியடிக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சதி செய்து வருகின்றது — என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

ST JOHN'S COLLEGE, JAFFNA
AND
CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA

ADMISSION - 1995

1. பின்வரும் வகுப்புகளில் மட்டும் வெற்றிடங்கள் உள- ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு.
2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 23 — 09 — 1994
   - (அ) விண்ணப்பப் படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 2 — 09 — 1994 முதல் 16 — 09 — 1994 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   - (ஆ) எக்காரணம் கொண்டும் 16 — 09 — 1994க்குப் பின் விண்ணப்பப் படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   - (இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   - (ஈ) 23 — 09 — 1994க்குப் பின் எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாகவோ அன்றி பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களிலும் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஆண்டு ஒன்றுக்கான படிவத்திற்கு — ரூபா 100/-
   ஆண்டு ஆறுக்கான படிவத்திற்கு — ரூபா 150/-
   செலுத்த வேண்டும்.
7. வயதெல்லைகள்;
   - (அ) ஆண்டு ஒன்று — விண்ணப்பதாரி 01 - 02 - 1989க்கும் 31 - 01 - 1990க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   - ஆண்டு ஆறு — விண்ணப்பதாரி 01 - 02 - 1984 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை;
   ஆண்டு ஆறு வகுப்புக்கு 22 — 10 — 1994 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

- அதிபர்கள்

[சி-8863]

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

VADDUKODDAI

முழுநேர பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கவுள்ளன....

★ நீங்கள் ஒரு தொழில்துறைப் பட்டதாரியாய் உருவெடுக்க மிகச் சுலபமான மார்க்கத்தை நாங்கள் சமைக்கிறோம்....... இங்கே தொடங்கும் பயிற்சி நெறி உங்களை திறந்த பல்கலைக்கழகத்திற்கு - பாடவிதான விலக்குகளுடன் இட்டுச் செல்லும்!

மாணவர்களே!

தொடர்புகள் அறுந்து போயுள்ள அவலத்தில் இது ஓர் அற்புத வாய்ப்பு;

வசப்படுத்திக் கொள்ளுங்கள்!! ★

TECHNICIAN DIPLOMA COURSES

(ENGLISH MEDIUM)

(இப்பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்)

1. Civil Engineering & Quantity-Surveying
2. Electronics & Electrical Engineering
3. Mechanical Engineering

Duration: 3 Years

Educational qualification:
Six subjects in G. C. E. (O/L) including Maths-C; Science - C; English - S.

★ We guide you through the simplest path to emerge as a "graduate in Technology!" Our courses lead you to the Open University of Shri Lanka with exemptions!

At a state of total break-down in communication, it's a fine opportunity!...

It's your's...If you are looking for it! ★

DIPLOMA COURSES

(ENGLISH MEDIUM)

(இப்பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையிலும், நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையிலும் நடத்தப்படும்.)

1. Civil Draughtsmanship - 1 Year
2. Computer Programming & Data Processing - 1 Year
   (BASIC, Cobol, d BASE III+ & Pascal) - Practicals on IBM PC AT & MAT 385 Industrial Controller.
3. Advanced Diploma in Computing - 1 Year
   (Syllabus Includes British Computer Society & Australian Computer Society)

Educational Qualification:
Six Passes in G. C. E. (O/L) with Maths - C & English - S and for Advanced Computing, Two Passes in G. C. E. (A/L)

இதர வசதிகள்;
1. நூலகம்
2. விடுதி (இருபாலாருக்கும் தனித் தனியே)
3. விளையாட்டுத்துறை (இதில் ஆர்வமுள்ளோர்க்கு விசேட பயிற்சி மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.)

விண்ணப்பப் படிவம்:
ரூபா 30-00 செலுத்தி தொ. நு. கல்லூரியின் வட்டுக்கோட்டை காரியாலயத்திலும், யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப் படிப்பு நிலையத்திலும் (யாழ். பொது மருத்துவமனை முன்பாக) பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 22 — 08 - 1994

TECHNICIAN CERTIFICATE COURSES

(ENGLISH MEDIUM)

(வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்)

1. Air - Conditioning & Refrigeration — 1½ Years
2. Radio & T. V. Servicing — 1 Year
3. Automobile Technology — 1 Year

Educational Qualification;
G C E (O/L) with Maths & Science - S

CRAFT COURSES

(TAMIL MEDIUM)

(வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்)

1. Machine Shop Practice — 1 Year
   (இயந்திரப் பட்டறைப் பயிற்சி)
2. Electrical Wiring & Installation Practice — 1 Year
   (மின்னிணைப்பும் நிர்மாணமும்)
3. Welding Practice — 1 Year
   (உலோக ஒட்டுவேலைப் பயிற்சி)

கல்வித் தகைமை;
க. பொ. த. (சா/த) வரை படித்திருத்தல் வேண்டும்.
க. பொ. த (உ/த) - 94 ஓகஸ்ட் - பரீட்சார்த்திகளுக்கு இப்பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

● மாணவர்கள் வெளிநாட்டுப் பரீட்சைகளை எதிர்கொள்ளத் தக்கவகையில் ஆங்கில மொழிமூலம் வேண்டிய தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும் இதற்கு ஏற்ப பயிற்சிக் காலம் பூராவும் ஆங்கிலம் கட்டாயபாடமாக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறிகள் செப்ரெம்பரில் ஆரம்பிக்க உள்ளன.

❋ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். ✶

[சி-8816]

DIRECTOR

அறிந்ததைச் சொல்லுங்கள்!
பதக்கத்தை வெல்லுங்கள்!!

தமிழீழத் தாயகத்தை தெரிந்து வையுங்கள்

உங்கள் அறிவு
மேம்படுத்தலுக்கு

தமிழீழத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

வினா விடைப் போட்டி

ஒரு பவுண் தங்கப் பதக்கம் பரிசு

அன்பு மாணவர்களே!

உங்கள் அறிவினை வளமாக்கி
உங்கள் திறமையை வெளிக்காட்டுங்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு நடாத்தப்படவிருக்கும் வினாவிடைப் போட்டியில் கலந்து கொண்டு முழுநிறைவான தங்கப்பதக்கத்தையும் பெறுமதி மிக்க பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 — 08 — 1994

விவரங்கள் கடந்த 07, 08, 09ஆம் திகதி பத்திரிகைகளில்

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.

[சி-8878]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அகதியா? கைதியா?

ஈழத்தில் ஸ்ரீலங்காப்படைகள் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு அஞ்சி, அகதிகளாக இடம்பெயர்ந்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்களின் நிலை இன்று அவலம் மிகுந்த ஒரு கதையாகி விட்டது!

ஈழத்தமிழ் அகதிகளை சிறைக் கைதிகளை விடக் கேவலமாக நடத்தும் தமிழக அரசின் போக்கை, மனித உரிமைகளுக்கான சர்வதேச அமைப்புக்கள் பல பகிரங்கமாகக் கண்டிக்கத் தொடங்கியிருக்கின்றன.

ஸ்ரீலங்காவில் சிங்களப் படைகளால் கைது செய்யப்பட்டு அவர்களின் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் — அப்பாவிகளான — ஈழத்தமிழ் கைதிகளை விட கேவலமான முறையில் தமிழக முகாம்களில் ஈழத்தமிழ் அகதிகள் நடத்தப்படுவதாகக் கண்டிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா படைகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் சென்று சந்திக்க அனுமதி உண்டு; தடுத்து வைக்கப்படுவோரின் மனித உரிமைகளுக்கான செயலணியின் பிரதிநிதிகளும் அவர்களைச் சந்திக்க முடியும்;

நடைமுறையில் சகல கைதிகளையும் சந்திக்க ஸ்ரீலங்கா அரசு அனுமதிக்கின்றதா என்பது கேள்விக்குறி என்றாலும் கொள்கையளவில் — உத்தியோக ரீதியில் — பகிரங்க அறிவிப்பு என்ற வகையில் — இத்தகைய சந்திப்புக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால் தமிழகத்தில் ஈழ அகதிகளைப் பொறுத்தவரை இந்த நிலை தானும் இல்லை.

உயிருக்கு அஞ்சி, புகலிடம் தேடி தஞ்சம் புகுந்த அகதிகளில் பல்லாயிரக்கணக்கானோர் அங்குள்ள அகதி முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது; தடுக்கப்பட்டிருக்கிறது;

சுருக்கக் கூறுவதாயின் அகதி முகாம் என்ற பெயரில் திறந்த சிறைகளில் அவர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அந்த முகாம்களுக்குள் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான பகிரங்க உத்தரவை தமிழக அரசு விடுத்திருக்கிறது.

அதாவது சிங்கள ஸ்ரீலங்காவில் கைதி ஒருவருக்கு வழங்கப்பட்ட — கொள்கையளவிலாவது வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட — உரிமை, வசதி; தமிழகத்தில் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவி அகதிக்கு இல்லை.

தமிழக அரசின் இந்த உத்தரவு மனித உரிமை அமைப்புகள் பலவற்றை சீற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

இந்தியாவின் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் வி. ஆர். கிருஷ்ணஐயர் தலைமையிலான இலங்கை — இந்திய நட்புறவுச் சங்கம் இந்த உத்தரவுக்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ளது;

சங்கம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இந்த விடயத்தில் தலையிட்டுள்ளது.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்த அகதிகளை மீண்டும் அவர்களது தாயகத்துக்கு விரட்டியடிக்கவே தமிழக அரசு அவர்களை கைதிகளாக்கி அவர்கள் மீது கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

ஆனால் —

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய ஈழத் தமிழர்களுக்கு இங்கு போதிய பாதுகாப்பு இல்லை என்று தாம் கருதுவதில் தொடர்ந்து அகதிகளை ஈழத்துக்கு அழைத்துவரும் நடவடிக்கையை நிறுத்துவது என்று அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்திலிருந்து ஈழ அகதிகளை தாயகத்துக்கு கூட்டிவரும் தனது பணியை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன்னர் மீண்டும் இந்த மாதத்தில் முடிவு செய்திருந்தது! ஆனால் அந்த முடிவை தூதரகம் இப்போது ரத்துச் செய்துவிட்டது.

ஐ. நா. தூதரகத்தின் புதிய முடிவு தமிழக அரசின் கபடத்தனமான நாடகத்துக்கு கிடைத்த ஓர் அடியாகும்.

தேர்தலுக்குப் பின்னர் அரசியல் முறுகல் நிலை வரும்; அரசமைப்பு மோதல் சிவில் யுத்தமாக மாறுமா?

ராணுவத்தை அரசியல் மயமாக்க ஐ.தே.கட்சி உயர்பீடம் முயற்சி

அரசியல்

உதயகாந்தன்

புதிய பாதையில்... புதிய இலங்கையை உருவாக்க, புதுயுகம் அமைக்க, புதிய தலைமையில் உங்கள் ஆதரவை நாடி நிற்கிறோம்.

புதிய யுகத்தை நோக்கி... சுயகௌரவம் காண, உரிமை பெற, சுதந்திரமாக, தனித்துவம் பேண எங்களின் வெற்றிக்கு வாக்களியுங்கள்.

உதயமாகும் புதிய யுகம்... நாடு வளம்பெற, வீடு நலம்பெற, அமைதி நிலைபெற எம்மை அன்புடன் ஆதரியுங்கள் - வாக்களியுங்கள்.

இந்த அலங்கார வார்த்தைகளும், அடுக்கு மொழிகளும் பொதுசன ஐக்கிய முன்னணி பத்திரிகைகளில் வெளியிட்ட முழுப்பக்க விளம்பரங்களில் காணப்பட்டவையாகும்.

இதேபோன்று—

தொலைநோக்கு... மேலும் நிலையான, சுபீட்சமான சமூகத்தை நோக்கி, தொடர்ந்தும் வழிநடப்போமாக.

ஸ்திரநிலை அல்லது குழப்ப நிலை உங்கள் தேர்விலேயே.

ஸ்திரநிலைக்கு வாக்களியுங்கள் ஐ. தே. கவுக்கே — என்று ஆளுங்கட்சியின் முழுப்பக்க விளம்பரங்கள் கோருகின்றன.

இன்னும் இரண்டு நாட்களில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்காவின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் வாக்குகளைத் திரட்டிவிடவேண்டும் என்ற ஆசையில், அக்கரையில் தெற்கின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் இவ்வாறு மக்களை வார்த்தைகளால் வசமாக்க முயல்கின்றன.

பொதுத்தேர்தலுக்கான பிரசாரம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்து விட்டது. சுவரொட்டிப் பிரசாரம், பத்திரிகை விளம்பரப் பிரசாரம், தொலைக்காட்சி - வானொலிப் பிரசாரம் ஆகியவை நேற்றோடு இறுதிக் கட்டத்தை அடைந்தன. அனல் கக்கிய மேடைப் பிரசாரமும் கடந்த நள்ளிரவோடு தணிந்து போயிற்று.

ஸ்ரீமான் பொதுசனம், இன்றும் நாளையும் வீட்டில் ஆற அமர இருந்து, செவ்வாய்க்கிழமை காலை தனது பொன் போன்ற வாக்கை யாருக்கு வழங்குவது — புள்ளடியை யாருக்குப் போடுவது— என்பதனை அலசி ஆராய்ந்து முடிவு செய்வதற்கு அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது!

கடந்த ஒரு மாத காலமாக தேர்தல் மேடைகள், பத்திரிகைகள், சுவரொட்டிகளில் பார்த்தவை. படித்தவை, கேட்டவற்றையும், வேட்பாளர்கள் வீட்டு வாசற்படி ஏறி செஞ்சிய வார்த்தைகளையும் மனக் கண்ணில் நினைவில் கொண்டு வந்து ஒரு முடிவுக்கு வருவர் வாக்காளர்.

இலங்கை மக்களைப் பொறுத்த அளவில், அரசியல் கட்சிகள் கூறிய வார்த்தைகளில் புதிய யுகத்தை நோக்கிப் பயணம் செய்யப் போகிறார்களா, தொலை நோக்குடன் நிலையான சுபீட்சமான சமூகத்தை நோக்கி நடக்கப் போகிறார்களா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

பலமான அரசு அமையுமா?

இவர்கள் பிரதான அரசியல் அணிகளில் எதற்கு வாக்களித்தாலும் விகிதாசாரத் தேர்தல் முறையால், எந்தக் கட்சியும் தாம் அளித்த வாக்குறுதிகளை செயலில் காட்டுவதற்கு பலமான அரசு ஒன்றை அமைக்க முடியாது என்றே பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் முடிவுகள் அனேகமாக ''தொங்கு'' நாடாளுமன்றம் ஒன்றுக்கே வகை செய்யும் என அவதானிகள் நம்புகின்றனர்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் இது மட்டும் ஒரு பிரச்சினையாக இருக்கப் போவதில்லை. தேர்தல் பிரசார வேளையில் இருந்ததை விட, முடிவுகள் வெளிவந்த பின்னரே பல சட்ட மோதல்களும் அரசமைப்புச் சிக்கல்களும் உருவாகப் போகின்றன.

எல்லோரும் எதிர்பார்ப்பது போல பொ. ஐ முன்னணி 113 ஆசனங்களுக்கு சற்று அதிகமாகப் பெற்றால் அரசியல், அரசமைப்பு குளறுபடிகளும் குழப்பங்களும் முன்னர் எப்போதும் இல்லாத வகையில் உருவெடுக்கும்.

ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், நடாளுமன்ற அரசாங்கம் அடுத்த கட்சியினுடையதாகவும் இருக்கும்போது, பல சிக்கல்கள், முறுகல்கள், மோதல்கள் என்பவற்றுக்கு இடமுண்டு.

புதிய அரசை அமைக்குமாறு ஜனாதிபதி யாரை அழைப்பார்? அமைச்சரவையின் தலைவர் என்ற வகையில் முக்கியமான பாதுகாப்பு, நிதி அமைச்சுகளை தாமே வைத்திருப்பாரா என்பன போன்ற கேள்விகள் எழுந்துள்ளன. இவை குறித்து இரு சாராரும் அரசமைப்ப விதிகளுக்கு தமக்குச் சாதகமான வியாக்கியானங்களைக் கொடுக்கிறார்கள்;

இவற்றோடு இன்னொரு பிரச்சினையும் காத்திருக்கிறது. நிறைவேற்று ஜனாதிபதி முறையையும், விகிதாசாரத் தேர்தலையும் மாற்றி அமைக்கும் நோக்கோடு அரசமைப்புச் சட்டத்தை புதிதாக இயற்றுவதற்கு பொ. ஐ முன்னணி உத்தேசித்துள்ளது.

சாதகமான வியாக்கியானம்

புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு தேர்தலில் பெறப்படும் மக்கள் ஆணை போதுமா? நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலத்தால் புதிய அரசமைப்பு நிர்ணய சபையை உருவாக்கலாமா? இப்போதுள்ள அரசமைப்பை மாற்றுவதற்கு சர்வசன வாக்கெடுப்புத் தேவையா? என்பன போன்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

இவற்றுக்கும் இருதரப்பைச் சேர்ந்தவர்களும் தத்தமக்குச் சாதகமான வியாக்கியானங்களையும் விளக்கங்களையும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தால் ஒரே சட்டத்தையே, வாதி தரப்புச் சட்டத்தரணியும், பிரதிவாதி தரப்புச் சட்டத்தரணியும் தத்தமது கட்சிக்காரருக்குச் சாதகமாக வியாக்கியானம் செய்து வாதாடுவார்கள்.

அதுபோன்றே தேர்தல் முடிந்து புதிய அரசை அமைப்பது தொடக்கம் அரசமைப்பை மாற்றுவது குறித்து பொ. ஐ. முன்னணியும் ஐ. தே. கவும் தத்தமக்கு வாய்ப்பான வியாக்கியானங்களைக் கூறுகிறார்கள்.

நீதிமன்றத்தில் சரியோ, பிழையோ தீர்ப்பு என்று கூறுவதற்கு ஒரு நீதிவான் இருப்பார். இங்கே அப்படி ஒருவர் இல்லை. அதனால் தாம் தாம் கூறுவதே சரி என்று இருசாராரும் தாம் எண்ணுவதை செயற்படுத்த முனையும் போது, பெரும் முரண்பாடுகள் தோன்றும்.

இவ்விடயங்களில் எல்லாவற்றுக்கும் நீதிமன்றம் போகாமல் ஜனாதிபதியே தீர்மானிக்கும் அதிகாரம் உண்டு. ஆகையால் தேர்தல் முடிந்தகையோடு வன்செயல்கள் வெடிக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்கப்படுகிறதோ — அதேபோன்று சட்டமோதல்களும், அரசமைப்புக் குழப்பங்களும் வெடிக்கலாம். தேர்தலுக்குப் பிந்திய வன்செயல்களை ஆயுத பலமும் அதனை அடக்க வேண்டும் என்ற உறுதியும் இருந்தால் அடக்கிவிடலாம். ஆனால் அரசமைப்புச் சிக்கல்களையும், முரண்பாடுகளையும், சட்ட மோதல்களையும் இலகுவில் தீர்த்துவிட முடியாது. இவற்றை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றுகொண்டிருந்தால் அரசு சரியாக, முறைப்படி, தனக்குரிய அதிகாரத்துடன் இயங்க முடியாது பலவீனமுற நேரிடும்.

இராணுவ ஆட்சி சாத்தியமா?

அத்தகைய ஒரு நிலை தோன்றும் போது, பாகிஸ்தான் போன்ற இராணுவ பலம் கொண்ட நாடுகளில் அதுவே நல்ல சந்தர்ப்பம் எனப் பார்த்திருந்து இராணுவப் புரட்சி ஒன்று வெடிக்கும் சாத்தியம் உருவாகக் கூடும்.

ஆனால் அதற்கான சாத்தியம் ஸ்ரீ லங்காவில் இல்லை. இங்கு இராணுவ வல்லாண்மை மிகக் குறைவு. அத்தோடு இராணுவ ஆட்சியை தோற்றுவிக்கக் கூடிய வழிவழி உட்கட்டமைப்பும் இராணுவத்தில் இல்லை.

மேலும் இப்போது இராணுவத் தளபதியாக இருக்கும் லெப். ஜெனரல் சில்வா ஒரு கிறிஸ்தவராதலால் கீழ் மட்ட அதிகாரிகளாக இருக்கும் பௌத்தர்களின் ஆதரவைப் பெறமுடியாது. படைகளில் ஐ. தே. க. ஆதரவாளர்கள் மட்டுமன்றி சுதந்திரக் கட்சி, ஜே. வி. பி. ஆதரவாளர்களும் நிறைய உள்ளனர்.

ஆகையால் ஸ்ரீ லங்காவில் எத்தகைய அரசியல் குழப்பம் உண்டானாலும் இராணுவ ஆட்சி உருவாகுவது கஷ்டம்.

எந்த அரசு பதவிக்கு வந்தாலும், அதன் உத்தரவுக்குப் பணிந்து, அதற்கு விசுவாசமாக உழைப்பதே இராணுவத்தின் வழக்கம். அந்த வகையில் அரசுக்கு அடங்கிய சேவகனாக ஸ்ரீலங்கா இராணுவம் கடந்த பதினேழு வருடங்களாகச் செயற்பட்டு வருகிறது. குறிப்பாக ஈழப்போர் இரண்டு தொடங்கிய பின்னர் — கடந்த நாலரை வருடங்களாக — ஐ. தே. அரசின் முடிவுகளில் இராணுவத்தின் செல்வாக்கு மேலோங்கியுள்ளது தெரிந்ததே.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்கலாம் என்ற நம்பிக்கையை ரஞ்சன் விஜேரத்னா முதல் கொண்டு விஜேதுங்கா வரையான தலைவர்களுக்கு ஊட்டி, அவர்கள் அரசியல் தீர்வை உதாசீனம் செய்வதற்கு பக்கதுணையாக இருந்தவர்கள் படை உயர் அதிகாரிகளே!

குறிப்பாகச் சொல்வதானால் ஸ்ரீலங்காவின் அரசியலை - ஆளுங்கட்சியின் அரசியலை — இராணுவ மயப்படுத்துவதில் படை அதிகாரிகள் வெற்றி கண்டிருந்தனர்; தமிழர் போராட்டம் தொடர்பாக எடுக்கப்படும் முடிவுகள் அரசியல்வாதிகளின் தீர்மானங்களாக இல்லாமல், படை அதிகாரிகள் சிபாரிசு செய்வதை ஆட்சித் தலைவர்கள் ''கண்ணை மூடிக்கொண்டு'' அங்கீகரிக்கும் நிலைக்கு கொண்டு வந்திருந்தார்கள்.

இராணுவத்தை அரசியல மயமாக்க முயற்சி

ஆகையால் இராணுவத்தை அரசியல் மயப்படுத்துவது என்ற மறுபக்கச் செயற்பாடும் நடைபெற வாய்ப்பு உண்டு. படைகளைச் சேர்ந்தவர்கள் ஐ. தே. கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று கோரி அக்கட்சியின் செயலாளர் கடிதம் தயாரித்தது அந்தத் துணிவில் தான்!

ஐ. தே. கட்சி தோற்கும் போது, சட்ட மோதல்களும், அரசமைப்புக் குழப்பங்களும் உண்டாகும் பட்சத்தில் அரசியல் தலைமைத்துவத்தின் கீழேயே சில காலத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை நீடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே ஐ. தே. க. செயலாளரின் செயற்பாட்டை நோக்கவேண்டும்.

அந்தக் கடிதத்தை படையினருக்கு அனுப்ப வேண்டாம் என்று ஜனாதிபதி தடுத்துவிட்டதாகக் கூறப்பட்டாலும் உள்ளார்ந்த நோக்கம் அதுவாகவே இருக்கும்.

பொ. ஐ. முன்னணி ''தொங்கு நாடாளுமன்றம்'' ஒன்றை உருவாக்கும் பட்சத்தில், அதனை செயலற்றதாக்கும் விதத்தில் சட்டச் சிக்கல்களை முன்வைத்து பலவீனம் அடையச் செய்வது. அல்லது இராணுவத்தின் உதவியுடன் ஜனாதிபதி ஆட்சியை நீடிப்பது என்ற நிலை உருவாகினாலும் உருவாகலாம்.

அப்படி ஒரு நிலைமை உருவானால் தெற்கில் சிவில் யுத்தம் ஒன்று வெடிக்கலாம். மக்களே திரண்டு ஜனாதிபதியை வெளியேற்றுவதற்குக் கலகம் நடத்தலாம்.

தேர்தல் பிரசார காலச் சூட்டைவிட, தேர்தலுக்குப் பிந்திய சட்ட, அரசமைப்பு மோதல் அனலாகக் கொதிக்கும் என எதிர்பார்க்கலாம். புதிய யுகத்தை விரும்பி சிங்கள மக்கள் அளிக்கும் வாக்குகள் அந்த நெருப்பில் வெந்துபோனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

பிருந்தாவனமும் 'நம் தம் குமாரரும்' யாவருக்கும் பொதுச் சொந்தமன்றோ?

ஜெயம்

''புதன் இரவு 7 மணியளவில் அமரர் கிட்டு அவர்களின் ஞாபகார்த்தப் பூங்கா திறப்புவிழா கலந்துகொள்க'' என்று வந்த சாதாரண அழைப்பைப் பார்த்தபோது இத்தகைய ஒரு பிரமாண்ட அமைப்பை பார்க்கப் போகிறேன் என்று நினைக்கவில்லை.

பலதரம் அவ்வழியால் போய் வந்த போது அவ்விடத்தில் அமரர் கேணல் கிட்டு ஞாபகமாக பூங்காவொன்று அமைக்கப்படுவதாய் அறிந்திருந்தேனெனினும் அப்பணி இத்துணை பெரிதாய் புதியதோர் உலகம் சமைக்கும் முயற்சியாய் இருக்கும் என முன்பு கனவிலும் கருதவில்லை.

உள்ளே போனதும் யாழ்ப்பாணம் பற்றிய மஹாகவியின் கற்பனையே மனதில் வந்தது.

''ஆறு பிறந்து திரிந்து வயல்கள்
அடைந்து பயிர்கள் விளைந்திடவான்
ஏறி உயர்ந்த மலையெதும் இங்கை
என்ற ஒரு கதை சொல்வதுண்டு.
ஏறி உயர்ந்த மலையில்லையாயினும்
என்ன இருந்தன தோள்களென்றே
கூறி உழைத்துப் பின் ஆறிக்கலை [illegible]
ஊறிச் சிறந்தது யாழ்ப்பாணம்.''

இவ்வாறு யாழ்ப்பாணத்தின் இயற்கை வளக்குறைபாட்டைச் சுட்டி பின் உழைப்பின் வெற்றியாய்த் திகழும் ஆடவர் தம் தோளை மலையாய்க் கற்பனை பண்ணித் தம் மனமாற்றுவார் மஹாகவி. இன்று அவ்வாடவர் தம் தோள்வலியால் அவர் மனம் பிறந்த மலை, ஆறு அத்தனையும் கண்முன்னே நிஜக் காட்சியாய் தோன்றியிருப்பது கண்டு என் மனம் எல்லையில்லா மகிழ்ச்சிகொண்டது.

நாம் நிற்பது யாழ்ப்பாணத்திற்தானோ என எண்ணத் தூண்டும்படி மாறிப்போய் இருக்கிறது அவ்விடம். ''யாழ்ப்பாணத்தின் அழகான இடம் எது?'' எனக் கேட்டால் இனி எந்தக் குழந்தையும் கண்ணை மூடிக்கொண்டு இவ்விடத்தின் பெயரைச் சொல்லும்.

நமக்கு ஒரு தனி நாடு கிடைத்தால் ஆறு, மலை அனைத்தையும் [illegible] காட்டுவோம் என அறைகூவி இருக்கின்றனர் வேங்கைகள். புதுப்பொலிவு பெற்றிருக்கும் சங்கிலியன் சிலை ஒருபுறம். வீரியத்தோடு நிமிர்ந்து கழுத்தரும் தியாகி கேணல் கிட்டுவின் சிலை மறுபுறம். நல்லூரை இராஜதானியாய்க் கொண்டு ஆட்சி செய்த இருவர்க்கும் ஒரே இடத்தில் சிலைகள் பொருத்தமானதே.

பெரும்மலை, அதன்வழி பொங்கிவரும் அருவி, மலையினூடு உட்செல்லும் குகை, அதனுள் அழகான மீன்தொட்டிகள் மற்றும் குளம், புல்வெளிகள் பேராதனை பூங்காவை நினைவூட்டும் தொங்கு பாலம், குழந்தைகளை கவர்கின்ற பலவடிவ இருக்கைகள், பறவைக் கூடுகள், சரித்திரச் சான்றாய் நிற்கும் வீரர்களால் துவம்சம் செய்யப்பட்ட ''டாங்கி'' இத்தனையும் நம் காட்சிக்கு இலகுவாய்க் கிடைக்கிறது. இவ்வளவு காலமும் பயமூட்டிக் கொண்டிருந்த பெருமரங்க [illegible] பதுபோல் புதுப்பொலிவு [illegible]. ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் மட்டுமே இருந்து, உலகத் தொடர்பற்றிருக்கும் நம் இளஞ் சந்ததியினருக்கு இவ்விடம் மன வரிவினையும் புத்துணர்ச்சியையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இனி விடுமுறை நாள்களில் ''கண்டி போகமுடியாது, நுவரெலியா போகமுடியாது'' என்று யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை. அத்துணையற்புதமாய் திகழ்கிறது கிட்டு நினைவுப்பூங்கா.

''முல்லையைக் குறிஞ்சி
யாக்கி மருதத்தை முல்லை
யாக்கி புல்லிய நெய்தல்
தன்னை பொருஅரு மருத
மாக்கி''

என ஆதின் கம்பன் கண்டமாற்றம் நம் இளைஞரின் வீறினால் இங்கு விளைந்திருக்கின்றது. சத்தியமாய் இது ஒரு சாதனையே.

இவ் அழகான இடத்தை நம் பொதுச்சொத்தாய் நினைந்து அதை அனுபவிக்கப் போட்டி போடும் பொதுமக்கள், இந்நாட்டையும் அதன் விடுதலையையும் அதற்காகப் போராடும் நம்தம் குமாரரையும் பொதுச்சொத்தெனப் போற்றத்துணிவார்களா?

★

---

17 வேங்கைகள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை உதயகுமார்)
★ 2ஆம் லெப். வெண்ணிலவன் அல்லது வெள்ளையன் (கதிர்காமப்போடி துரைராஜா)
★ 2ஆம் லெப். ரூபன் அல்லது நக்கீரன் (கந்தையா விமலேஸ்வரன்)
★ 2ஆம் லெப். உலகவன் அல்லது ஜெனித் (இராசமணி செல்வராஜா)
★ வீரவேங்கை பவிராஜ் (கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி)
★ வீரவேங்கை சந்திரமாறன் (அழகிப்போடி விக்கினேஸ்வரன்)
★ வீரவேங்கை மதனகுமார் (சாமாங்கம் சாம்பசிவம்)
★ வீரவேங்கை நந்தகுமார் (முத்து வசந்தகுமார் — அம்பாறை)
★ வீரவேங்கை பரமகரன் (வடிவேல் புலேந்திரன்)
★ வீரவேங்கை ரமணி (கதிர்காமநாதன் சபாரத்தினம் — மட்டக்களப்பு)
★ வீரவேங்கை குட்டிமணி (கணேசபிள்ளை சிவாகரன்)
★ வீரவேங்கை துமிலன் (சங்கரப்பிள்ளை மகேந்திரன்)
★ வீரவேங்கை [illegible] (கணபதிப்பிள்ளை ஜெயராஜா)

(ஐ)

தாக்குதலில் காய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன் [வயது 29] — பெண்மணி
★ நாகலிங்கம் உமாசங்கர் [வயது 23]
★ ஆறுமுகம் லோகேஸ்வரன் [வயது 60] — இளைப்பாறிய ஆசிரியர்
★ ஐ. பரமேஸ்வரி [வயது 48] [புத்தூர் மேற்கைச் சேர்ந்தவர்]

அச்சுவேலி வடக்கில் ஷெல்களினால் படுகாயமுற்றோர்
★ அருணாசலம் பாலகிருஷ்ணர் [வயது 29]
★ சின்னத்துரை விக்னேஸ்வரன் [வயது 29]

அளவெட்டி

அளவெட்டி வடக்கில் தர்மலிங்கம் ரஞ்சிதமலர் [வயது 42], காசிப்பிள்ளை தர்மரெத்தினம் [வயது 65] ஆகியோர் காயமுற்றனர்

மல்லாகம

மல்லாகம் கட்டுவன் வீதியில் வீடொன்றில் வீழ்ந்த ஷெல்லினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமுற்றனர் அவர்களின் விவரம் வருமாறு:-
★ முத்துக்குமாரு பரமேஸ்வரி [வயது 54]
★ அவரது மகள் முத்துக்குமாரு சகிலா [வயது 10)
★ முத்துக்குமாரு பரமேஸ்வரியின் பேர்த்தியான சுரேஸ்வரன் சசிப (வயது 1).

ஏழாலை

ஏழாலை மத்திய பகுதியில் விழுந்த ஷெல்களினால் படுகாயமுற்றோர்:-
★ செல்லையா சிவபாலன் (வயது 50]
★ சின்னத்தம்பி அருணாசலம் (வயது 56)

தொண்டமனாறு

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தை அண்டிய பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் நான்கு பிள்ளைகளின் தந்தையான சிதம்பரம் சந்தசாமி (வயது 47) என்பவர் படுகாயமடைந்தார்.

வல்வை

வல்வைச் சிவன் கோயில் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் படுகாயமுற்றோர்:-
★ திருமதி தையல்நாயகி சிதம்பரநாதன் [வயது 60)
★ திருமதி நாகசுந்தரேஸ்வரி இராமநாதன் (வயது 59).

புதனன்று,..

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விஜேதுங்கா, சந்திரிகா ஆகியோரின் தலைமைத்துவத்தை மட்டுமல்ல, தொண்டமான், அஷ்ரப் ஆகியோரின் எதிர்காலத்தையும் இத்தேர்தல் நிர்ணயிக்கப்போகிறது என்பதே அதுவாகும்.

★

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

எமதிடர் அகற்றிட வாவா

அரஹர சரவண பவகுக முருகா
அரனுமை நந்தன அரிதிரு மருகா
சுரரிடர் அகற்றிய கடம்படி வேலா
துரிதமாய் எமதிடர் அகற்றிட வா வா
பரவிடும் அடியவர்க் கருளுந்தயானா
பரபதம் அளித்திடும் ஆறுமுக ஞானா
இருவினை வேரொடும் இலக்கும் வேதா
இசைமணம் கமழும் நல்லூர்க்கந்த நாதா!

— கமல மயிலகை

மரண அறிவித்தல்கள்

திருமதி

அப்புத்துரைப் பத்தர் நாகரெத்தினம்

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்புத்துரைப் பத்தரின் அன்பு மனைவி நாகரெத்தினம் அவர்கள் 13 - 08 - 1994 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் நாகராசா, யோகராசா, வரதராசா (அழகு), செல்வராசா (ஜேர்மனி), மகேஸ்வரி, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, குலோத்தமி, குணமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பட்டணம் கஞ்சலிங்கம் (Ex-Staff Officer C T.B Anuradhapura), இராமச்சந்திரன், கனகமணிதேவி, மஞ்சுளா, யசோதாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், மோகனதாஸ், எலிசபெத்லதா (கண்டி), மொனிக்கா பிரியா (Jaffna Campus), மொறின் சித்திரா, உமா, மாலா, ஜெயகிருஷ்ணன், ஜஜா, மேனகா, அருள் பிரதீப், பானுகோபன், சியாமினி, சிவரூபன், தர்ஷிகா, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இலக்கம் 645, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (14 - 08 - 1994) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தகவல்:
அ. யோகராசா.
(மகன்)

யாழ்ப்பாணம். [32366]

விசுவர் சுப்பிரமணியம்

(மாமடு சுப்பிரமணியம் - இளைப்பாறிய உபதபாலதிபர்)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான வி. சுப்பிரமணியம் அவர்கள் 10-08-94 அன்று காலமானார்.

இவர் விசாலாட்சியத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற செல்வரட்ணம், விஸ்வநாதன், சிவபாலன், சிவானந்தன், திருமதி லோகானந்தன்-சிவாம்பிகை ஆகியோரின் அன்புத்தந்தையு ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 11-08-1994 அன்று இல. 05, அலைகரை வீதி, இறம்பைக்குளம், வவுனியாவிலுள்ள இவரது இல்லத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி அ. தியாகராஜன்;

89/5, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். [32368]

ஆறுமுகம் இரத்தினம் (தங்கராசா)

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் இரத்தினம் 13-08-94 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குணலஷ்சுமியின் அன்புக்கணவரும், மனோகரன், கணேஸ்வரன், வாமரதி, தவராசா, சதீஸ்வரன், நடேசன், காலஞ்சென்ற பாஸ்கரன், பத்மரோஷனி (நேசா ஆசிரியை மங்கையர்க்கரசி, வித்தியாசாலை), புஸ்பமாலர் (பட்டு) சதிமலர் (ரசாத்தி-மாணவி கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவலஷ்சுமி, கௌரி, மகேஸ்வரமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், மாலஷ்சுமி, சுஜனி, கார்த்திகா, கலைச்செல்வன்' குலதேவி, குமாரம் ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி நல்லலஷ்சுமியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை கலாசாலை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

கலாசாலை வீதி,
திருநல்வேலி. (32380)

வைத்திலிங்கம் கந்தையா

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வாசிகசாலைவீதி, கல்வியங்காட்டில் வாழ்ந்தவருமான வைத்திலிங்கம் கந்தையா காலமானார்.

இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி நல்லநாயகி, இரத்தினம், ஈஸ்வரநாதபிள்ளை, தியாகராசா, திருமதி கனமணி சுப்பிரமணியம், ஜெகதீசன், இந்திராதேவி, தினதயாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினா, சுப்பிரமணியம், மனோரஞ்சிதம், தேவராணி, பேரின்பம், ராணி ஆகியோரின் மாமனாரும், குமரன் றொஷானி, ஜெனனி ஆகியோரின் அருமைப்பேரனுமாவார்.

இவரது ஈமக்கிரியைகள் 14-8-94 இன்று பி.ப. 2 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:-
க. தியாகராசா
(மகன்)

வாசிகசாலைவீதி,
கல்வியங்காடு. (32379)

பரமசாமி மகேந்திரன்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்-கச்சேரி, மன்னார்)

பரமசாமி மகேந்திரன் 12-08-94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமசாமி, காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் மகனும், டாக்டர் தில்லைநாயகியின் (மகேந்திரா, கிளினிக், நாவற்குழி அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாம்பசிவம், நகுலேஸ்வரி ஆகியோரின் மருமகனும், புவிராஜ் சோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தியாகலிங்கம் (நாரந்தனை கணேச வித்தியாலயம்), திருமூலநாதன் (சாபசன் புத்தக சாலை, வெள்ளவத்தை), திலகவதி திருநாமச்சண்முகம் (ஜேர்மனி), யோகேஸ்வரி (ஜேர்மனி), திருமலைநாதன் (ஜேர்மனி), திருக்கேதீஸ்வரநாதன் (லண்டன்), திருமகள் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 13-08-94 சனிக்கிழமை நாவற்குழியில் நடைபெற்றன

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
Dr. தில்லைநாயகி மகேந்திரன்

மகேந்திரா கிளினிக்
நாவற்குழி,
கைதடி. (32376)

வலி வடக்கு, வலி கிழக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்

அச்சுவேலி தோப்புக்கொலனியில் உள்ள வீடொன்றில் விழ்ந்த ஷெல்லினால் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலியாகினர்.

இரட்டைத் தொடர் ஷெல்களாக ஐம்பதுக்கும் மேற்பட்ட ஷெல்கள் அடுத்தடுத்து வந்து வீழ்ந்ததால் மேற்படி பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது. மக்கள் வீடுகளிலிருந்து விழுந்தடித்துக்கொண்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர். பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்தனர்.

பலாலி வளலாய்ப் பகுதியிலிருந்து தொண்டமானாறு செல்வச்சந்நிதிப் பகுதியை நோக்கியும் ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

செல்வச்சந்நிதி கோவில் உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இத்தாக்குதல் நடத்தப்பட்டதால் அங்கு கூடியிருந்தோர் சிதறி ஓடினர்.

இத்தாக்குதலினால் அங்கு பலர் காயமுற்றனர்.

காயமுற்றோர் வல்வை இந்திராணி ஆஸ்பத்திரி, மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி ஆகியவற்றில் சேர்க்கப்பட்டனர்.

சந்நிதி ஆலயச் சுற்றாடலில் அமைக்கப்பட்டிருந்த செஞ்சிலுவைச் சங்க பணிமனைக்கு அருகில் முதலாவது ஷெல் விழுந்து வெடித்தது. எனினும் தெய்வாதீனமாக அங்கிருந்தோர் உயிர் தப்பினர்.

பலாலி முகாமைச் சூழவுள்ள பிரதேசங்களில் தோட்டங்களில் வேலை செய்து கொண்டிருந்த பலர் நேற்றைய ஷெல் தாக்குதல்களில் காயமுற்றனர்.

(உ-4-11-13-15-155)

அராலிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது.

அதனைத் தொடர்ந்து புக்காரா விமானம் ஒன்று அராலிப் பகுதியை வட்டமிட்டுச் சென்றது.

அதன் பின்னர் காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் இருந்து அராலிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதனால் அராலிப் பிரதேச மக்கள் நேற்று இடம்பெயர்ந்தனர்.

(உ-ஜ-12-13-15-161)

அடுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் வன்செயல்கள் இடம்பெறுவது வழமையானது என்றும்— ஆயினும் இத்தமுறை நாட்டில் வழமையை விட வன்செயல்கள் அதிகரிக்கக்கூடும் என்றும் கொழும்பில் அவதானிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

"தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படப்போவது தவிர்க்க முடியாதது. ஆனால் அது அமைதியாக இடம்பெறும் எனத் தெரியவில்லை" - இவ்வாறு ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

(ஐ-6)

நிறைமாதக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ அச்சுவேலி தோப்புப் பகுதியில் நேற்று பிற்பகல் சின்னத்தம்பி என்பவரது வீட்டின் மீது விழுந்த ஷெல்லினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நிறைமாதக் கர்ப்பிணி உட்பட ஐவர் பலியாகினர். குடும்பத்தில் சிறுமி ஒருத்தி படுகாயங்களுடன் தப்பினார். உயிரிழந்த ஐவரின் விபரம் வருமாறு

★ சின்னத்தம்பி பூலட்சுமி [வயது 55]

★ சின்னத்தம்பி அகிலன் (வயது 12)

★ திருமதி இந்திரன் லீலாவதி [வயது 25)—நிறைமாதக் கர்ப்பிணி.

★ இந்திரன் வனிதாதேவி (வயது 02)

★ பொன்னன் வனிதா (வயது 12)

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப்பிரிவு
யாழ்ப்பாணம்

SLAS SLEAS அதிபர்

பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. கற்கவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு:

யாழ்ப்பாணக் கல்லூரி
464, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-8683]

யாழ். றோட்டறிக் கழகம்
வறியோருக்கான
கண் சத்திரசிகிச்சை
முகாம் - 4

நோயாளர்களைத் தெரிவு செய்வதற்கான
ஆரம்ப பரிசோதனை

இன்று ஞாயிறு 14-08-1994 காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இடம்:- இணுவில் ஆஸ்பத்திரி

★ கற்றறுக் (Cataract) எனப்படும் கண்ணில் பூப் படலம் வளர்ந்துள்ள நோயாளர்கள் காலை 7.30 மணிக்கு முன் வைத்தியசாலைக்குச் சமூகமளிக்கவும்.

S.M. பெர்னாண்டோ ஆதரவில்

S·M·FERNANDO

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி/8881)

மின்னும் ஒளியில் ஓர் இனிய
மாலைப் பொழுது!!!

திருநெல்வேலி அபர்ணாலயா இசைக் கல்லூரியின்
மேம்பாட்டு நிதிக்காக

அபர்ணாலயாவின் மதுரகான கலைஞர்கள்
வழங்கும்

புது வசந்தம்

......இங்கு வந்த புதுவசந்தம் எங்கும் தங்கும்

இசைப் பிரியர்களுக்கு ஓர் பொன் நாள்

இடம்: கைலாசபதி கலை அரங்கம்
காலம்: 20 - 08 - 1994 சனிக்கிழமை
காலை 9 மணி மாலை 5 மணி

விளம்பர அன்பளிப்பு:

நியூ யாழ் சைனிஸ்
124 . 1 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(சி/8869)

வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்
நூல்கள் கையளிப்பு
வைபவம்

இடம்: வேம்படி மகளிர் கல்லூரி
மேபிள் தம்பையா மண்டபம்
காலம்: **15 - 08 - 94** திங்கள்
பி.ப. 2.00 மணி
தலைவர்: திருமதி **P.S.** ஸ்கந்தராஜா
[அதிபர்]
பிரதம விருந்தினர்: திரு. மா. இராமதாசன்
(பொறியியலாளர், மாநகரசபை யாழ்ப்பாணம்)
ஆசியுரைகள்:
சிவத்தமிழ்ச் செல்வி துர்க்காதுரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
வைத்திய கலாநிதி
செல்வி என். கனகரட்ணம்
[தலைவி, பழைய மாணவர் சங்கம்)
திரு. இ. ஜெயராஜ்
(அமைப்பாளர்-அகில இலங்கைக் கம்பன் கழகம்)
நூல்கள் கையளித்தல்:
பிரதம விருந்தினர் உரை:
சிறப்பு விருந்தினர்கள் உரை:
திரு. சி. வேலாயுதம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. க. திருநாவுக்கரசு
(அறங்காவலர் - வடஇலங்கை சர்வோதயம்)
திரு. நாக. சண்முகநாதபிள்ளை
(அதிபர், யாழ்/மத்திய கல்லூரி)
திரு. எஸ். டிவகலாலா
(உதவி உள்ளூராட்சி ஆணையாளர் யாழ். கிளிநொச்சி)
நன்றியுரை:
திரு சி. சிவராஜா
(செயலாளர்)
(முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்)

● பெற்றோர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

யா/வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு!

குறிஞ்சி பார்மசி

3, மொடல் மாக்கெட், திருநெல்வேலிச்சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-8882)

மரண அறிவித்தல்கள்

திருமதி பொன்னம்மா சின்னையா

அல்லைப்பிட்டி கிழக்கு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கோப்பாய் அரசினர் வைத்தியசாலை அருகில் வசித்தவருமான திருமதி பொன்னம்மா - சின்னையா அவர்கள் 13 - 08 - 94 இல் காலமாகிவிட்டார்.

இவர் ஏரம்பு தெய்வானை தம்பதியின் கனிஷ்ட புத்திரியும், நாகனாதி தம்பதிகளின் மருமகளும், நாகலட்சுமி நாகராசா, பத்மாவதி தருமரட்ணம் [கோப்பாய் அரசினர் வைத்தியசாலை] ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகதம்பி, நாகராசா, காலஞ்சென்ற கந்தசாமி - தருமரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும், அருணாசலம் சங்கரப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை - நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகரஞ்சினி - திருபாலசிங்கம், நந்தினிமாலா- செல்வநிதி [வேலணை மேற்கு]. நடனவாணி (வே.ப. நோ கூ. சங்கம்]. நாகநந்தினி, மோகனதாஸ், சாந்தரூபன், மதிவேணி கமலதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை 14 - 8 - 94 அன்னாரது கோப்பாய் இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்
க. செல்வநிதி
[வேலணை மேற்கு]

கனகரெத்தினம் செல்வநிதி,
109/2, சட்டநாதர் வீதி,
நல்லூர். [32372]

கதிரேசு நடராசா

71/6 புகையிரத நிலையவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிரேசு நடராசா 12 08. 94 (வெள்ளிக் கிழமை) காலமானார்

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, இந்திராணி, ஏகாம்பரநாதன், கதிர்காமநாதன், சாரதா, ஹரிதாஸ், சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தந்தையும் கைலாயபிள்ளை, யோகராசா, விஜயகுமார், விஜயானந்தன், யோகராணி, பத்மகாந்தா ஆகியோரின் அன்புமாமனாரும் சிவநேசன் மங்களகௌரி, கிஜிதா, கிருஷா, விவேக், கிஷேஷ், வினோத், திவாகர், நிரேஷ், திவ்வியா, சுதாகர், சரண்ஜா, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.8.94) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

தகவல்:-
திருமதி கை. நாகேஸ்வரி
(மகள்)

71/6, புகையிரதநிலைய வீதி,
யாழ்ப்பாணம் (3237)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.